
# தினபூமி

thinaboomi.com

பூமி: 31 சுற்று: 198 ஆனி 26

RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017

மதுரை, வியாழன், ஜூலை 10, 2025 | ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00

## மாணவர்கள், சுற்றுலா பயணிகள் விசா பெறும் நடைமுறைகளை கடுமையாக்கியது அமெரிக்கா

...2-ம் பக்கம்

## குஜராத் பாலம் விபத்து: ரூ.2 லட்சம் நிவாரண நிதி; பிரதமர் மோடி அறிவிப்பு

...3-ம் பக்கம்

## இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் முன்னிலை பெறுமா இந்திய அணி? 3-வது டெஸ்ட் இன்று தொடக்கம்

...6-ம் பக்கம்






● திருச்சி ஜமால்முகமது கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்ற ஜமால்முகமது கல்லூரியின் பவள விழா ஆண்டின் தொடக்க விழாவில் குளோபல் ஜமாலியன்ஸ் பிளாக் கட்டிடத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து பேசினார். இந்த விழாவில் அமைச்சர்கள் கே.என்.நேரு, கோவி.செழியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன், டி.ஆர்.பி.ராஜா, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் காதர் மொகிதீன், எம்.பி.க்கள் திருச்சி சிவா, நவாஸ் கனி, கவிஞர் சல்மா, சட்டமன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், அப்துல்சமது, மேயர் மு.அன்பழகன் உள்ளனர்.

### மாணவர்களுக்கு அரசியல் புரிதல் வேண்டும்:

# 'ஓரணியில் தமிழ்நாடு' நின்றால் நம்மை யாராலும் வீழ்த்த முடியாது

### திருச்சி கல்லூரி விழாவில் முதல்வர் முக.ஸ்டாலின் பேச்சு

திருச்சி, ஜூலை 10-

**`காந்தி வழி, அம்பேத்கர் வழி, பெரியார் வழி என்று மாணவர்கள் பின்பற்ற வழிகள் உள்ளன. ஆனால், கோட்சே கூட்டம் பின்னால் மாணவர்கள் சென்றுவிடக் கூடாது.' என்று திருச்சி ஜமால் கல்லூரி பவளவிழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசினார். மேலும், மாணவர்களுக்கு அரசியல் புரிதல் வேண்டும் என்று தெரிவித்த முதல்வர், 'ஓரணியில் தமிழ்நாடு' நின்றால் நம்மை யாராலும் வீழ்த்த முடியாது என்று உறுதிப்பட தெரிவித்துள்ளார்.**

**கல்லூரி பவள விழா...**

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் பவள விழா ஆண்டின் துவக்க நாளான நேற்று (ஜூலை 9) குளோபல் ஜமாலியன் பிளாக் என்ற புதிய கட்டிடத்தை தமிழக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். அவருடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ், கோவி செழியன், எம்பிக்கள் சிவா, சல்மா, நவாஸ் கனி, கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் ஏ.கே.காஜா நஜீமுதீன், பொருளாளர் எம்.ஜே.ஜமால் முகமது உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

**பரபரப்பாக இருந்தாலும்**

அதைத்தொடர்ந்து மாணவர்களிக்கிடையே முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

நான் முதல்வராக பொறுப்பேற்றதில் இருந்து தொடர்ந்து பயணம் செய்து அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறேன். அதுமட்டுமல்ல, ஆய்வுக்கூட்டம், அரசுப்பணி என தொடர்ந்து பரபரப்பாக இருந்தாலும், உங்களைப் போன்ற இளம் மாணவர்களை சந்திக்கின்றபோது எனக்கு எனர்ஜி வந்துவிடுகிறது. அதிலும் மாணவர்கள் அதிகமாக இருக்கக்கூடிய நிகழ்ச்சி என்றால், உடனே ஓகே சொல்லிவிடுவேன். இப்போதுகூட, திருவாரூர் பயணத்திற்கு நடுவில் உங்களை சந்திக்க வந்திருக்கிறேன்.

**நாட்டுக்கு வழிகாட்டும்**

இந்த ஜமால் முகமது கல்லூரிக்கு நான் வருவது, இது முதல்முறை கிடையாது. பல முறை வந்திருக்கிறேன். ஒற்றுமையும், சகோதரத்துவமும் எப்படி வலுப்பட வேண்டும் என்று நாட்டுக்கு வழிகாட்டும் நிறுவனமாக இந்த கல்லூரி இருக்கிறது. இங்கு உங்களுக்குள் உருவாகும் நட்பு எல்லா காலத்துக்கும் தொடர வேண்டும். கல்லூரி நட்பு, முதிய வயது வரை உறுதியாக இருக்க வேண்டும். அது இந்த சமூகத்திலும் எதிரொலிக்க வேண்டும். ஏனென்றால், இந்தக் கல்லூரி ஹாஜி ஜமால் முகமது சாஹிப், ஜனாப் காஜா மியான் ராவுத்தர் ஆகியோரின் நட்பினால் உருவானது.

**சென்றுவிடக்கூடாது...**

கல்லூரியை உருவாக்கிய

(கடைசி பக்கம் பார்க்க)

### மத்திய அரசை எதிர்த்து தொழிற்சங்கங்கள் நடத்திய

# நாடு தழுவிய வேலை நிறுத்தத்தால் தமிழகத்தில் எந்த பாதிப்பும் இல்லை

* வழக்கம்போல் அரசு, தனியார் பேருந்துகள், கடைகள் இயங்கின
* கேரளா, மேற்கு வங்கம், ஒடிசாவில் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

சென்னை, ஜூலை 10

**மத்திய அரசை எதிர்த்து 17 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 13 தொழிற்சங்கங்கள் நடத்திய பாரத் பந்தால் தமிழ்நாட்டில் எந்த பாதிப்பும் இல்லை. பேருந்துகள், கடைகள் வழங்கம் போல் இயங்கின. நாடு தழுவிய போராட்டத்தால் கேரளா, மேற்கு வங்கம், ஒடிசாவில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.**

மத்திய அரசை எதிர்த்து, 13 தொழிற்சங்கங்களின் ஊழியர்கள், நேற்று (ஜூலை 9) பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர். இதனால், வங்கிகள் மற்றும் அரசு நிறுவனங்கள், குறைந்த ஊழியர்களுடன் செயல்படும். தமிழகத்தில் ஆசிரியர் சங்கங்கள், வருவாய் துறை அலுவலர் சங்கங்கள் போன்றவை, வேலை நிறுத்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. அதனால், இன்று வேலைக்கு வராதவர்களுக்கு சம்பளம் கிடையாது என, மாநில அரசு எச்சரிக்கை விடுத்திருந்தது ள்ளது.

இந்த வேலைநிறுத்தம் காரணமாக கேரளா, மேற்கு வங்கம், ஒடிசா போன்ற மாநிலங்களில் போக்குவரத்து ஸ்தம்பித்தது. இதனால், மக்களின் இயல்புநிலை பாதிக்கப்பட்டது. விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும்; வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும்; மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும். பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்க்க கூடாது என்பது உட்பட, 17 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, சி.ஐ.டி.யு., - ஏ.ஐ.டி.யு.சி., - தொ.மு.ச., - ஐ.என்.டி.யு.சி., உட்பட, 13 தொழிற்சங்கங்கள், இன்று நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தை அறிவித்து உள்ளன.

இப்போராட்டத்திற்கு தமிழகத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்களின் கூட்டமைப்பான ஜாக்டோ -ஜியோ, வருவாய் துறை அலுவலர் சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம், போக்குவரத்து, மின்சார தொழிற்சங்கங்கள் போன்றவை ஆதரவு தெரிவித்துள்ளன. இதனால், நேற்று வங்கிகள், மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்கள் குறைந்த ஊழியர்களுடன் செயல்பட்டன.

வேலை நிறுத்தத்தால், எந்தவித பாதிப்புமின்றி, தமிழகம் முழுதும் முழு அளவில் பஸ்கள் இயக்கப்படும் என, போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் அறிவித்திருந்தார். அதன்படி, தமிழகத்தில் வழக்கம்போல் பஸ்கள் இயக்கப்பட்டன. தமிழகத்தில் இருந்து கேரளா செல்லும் பஸ்கள் மட்டும் நிறுத்தப்பட்டுள்ளன. பந்த் காரணமாக, தமிழகத்தில் வங்கிகள், இன்சூரன்ஸ் நிறுவனங்களில் பணிகள் பாதிக்கப்பட்டாலும், பொதுப்போக்குவரத்து வழக்கம் போல் இயங்கியது. கடைகள், வணிக வளாகங்கள் எப்போதும் போல் திறந்திருந்தன. ஆட்டோ, டாக்சிகள் இயக்கப்பட்டன. ரயில்கள் வழக்கம் போல் இயக்கப்பட்டன. மாநில அரசு அலுவலகங்கள் குறைந்த ஊழியர்களுடன் செயல்பட்டன. முக்கிய நகரங்களில் தொழிற்சங்கத்தினர் ஆங்காங்கே மறியலில் ஈடுபட்டனர்.

பந்த் காரணமாக, மேற்கு வங்க மாநிலத்தில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது. ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டதால் பயணிகள் அவதிக்கு ஆளாகினர். கோல்கட்டாவில் தொழிற்சங்கத்தினர் சாலை மறியலில் ஈடுபட்டதால் போக்குவரத்து ஸ்தம்பித்தது. துர்காபூர், ஜாதவ்புர், முர்ஷிதாபாத், பாரக்பூர் உள்ளிட்ட பல பகுதிகளில் தொழிற்சங்கத்தினர் தண்டவாளங்களில் மறியலில் ஈடுபட்டனர். எனினும் ஊழியர்கள் அனைவரும் பணிக்கு வரவேண்டும் என்று மாநில அரசு அறிவுறுத்தி இருந்ததால், அரசு அலுவலகங்கள் குறைந்த ஊழியர்களுடன் செயல்பட்டன. இடதுசாரி தொழிற்சங்கத்தினரும் ஆங்காங்கே போராட்டத்தில் ஈடுபட்டனர். பல இடங்களில் போலீசாருக்கும், அவர்களுக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

(கடைசி பக்கம் பார்க்க)

# பிரதமர் மோடிக்கு நமீபியாவின் உயரிய விருது வழங்கி கவுரவிப்பு

விண்ட்ஹோக்,

**நமீபியா நாட்டின் உயரிய விருது பிரதமர் மோடிக்கு வழங்கி கவுரவிக்கப்பட்டது. இந்தியாவும் நமீபியாவும் தங்கள் சுதந்திரப் போராட்டக் காலத்திலிருந்தே ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்து வருகின்றன என்று பிரதமர் மோடி கூறியுள்ளார்.**



பிரதமர் மோடி கானா, டிரினிடாட் அண்டு டொபாகோ, அர்ஜென்டினா, பிரேசில் மற்றும் நமீபியா ஆகிய 5 நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். கானா, டிரினிடாட் அண்டு டொபாகோ, அர்ஜென்டினா, பிரேசில் ஆகிய நாடுகளுக்கு சென்ற பிரதமர் மோடி, அடுத்த கட்டமாக ஆப்பிரிக்க நாடான நமீபியாவுக்கு சென்றுள்ளார். நமீபியாவின் விண்ட்ஹோக்கில் தரையிறங்கிய மோடியை அந்நாட்டு அதிபர் நெட்டம்போ நந்தி எண்டைட்வா நேரில் வந்து வரவேற்றார்.

பிரதமர் மோடிக்கு அந்நாட்டின் பாரம்பரிய முறைப்படி, வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு குதூகலமாக பிரதமர் மோடி மேளம் கொட்டி மகிழ்ந்தார். நமீபியா அதிபருடன் இருதரப்பு பேச்சுவார்த்தையை மோடி நடத்த உள்ளார். அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்ற உள்ளார். முன்னதாக பிரதமர் மோடிக்கு அந்நாட்டின் உயரிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து பிரதமர் மோடி நமீபியா நாட்டின் நாடாளுமன்றத்தில் உரையாற்றியதாவது:- இந்தியாவிற்கும் நமீபியாவிற்கும் இடையிலான உள்ள நட்புக்கு இது ஒரு சாட்சி, இன்று அதனுடன் இணைந்திருப்பதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். இந்த மரியாதையை நமீபியா மற்றும் இந்திய மக்களுக்கும், அவர்களின் தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கும், எங்கள் உடைக்க முடியாத நட்புக்கு அர்ப்பணிக்கிறேன்.

ஒரு உண்மையான நண்பர் கடினமான காலங்களில் மட்டுமே அங்கீகரிக்கப்படுகிறார். இந்தியாவும் நமீபியாவும் தங்கள் சுதந்திரப் போராட்டக் காலத்திலிருந்தே ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்து வருகின்றன. இந்த நட்பு அரசியலில் இருந்து பிறந்ததல்ல, போராட்டம், ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர நம்பிக்கையிலிருந்து பிறந்தது. எதிர்காலத்திலும், வளர்ச்சிப் பாதையில் ஒருவருக்கொருவர் கைகளைப் பிடித்துக்கொண்டு முன்னேறிச் செல்வோம்.

உலகின் மிகப்பெரிய வைர உற்பத்தியாளர்களில் நமீபியாவும், இந்தியாவில் மிகப்பெரிய வைர மெருகூட்டல் தொழில் உள்ளது. அதுவும் எனது சொந்த மாநிலமான குஜராத்தில். வரும் காலங்களில் இரு நாடுகளிடையே உள்ள நிந்த நட்பு இந்த வைரங்களைப் போலவே பிரகாசிக்கும் என்று நான் நம்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.




இராமநாதபுரம் மாவட்டம்

மரம் வளர்ப்போம்! மண் வளம் காப்போம்!!
பிளாஸ்டிக் தவிர்ப்போம்! மஞ்சப்பை பயன்படுத்துவோம்

## மண்டபம் முதல்நிலை பேரூராட்சி

| வ. எண் | ஆண்டு | திட்டத்தின் பெயர் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | 2021–2022 | நபார்டு நிதி உதவித்திட்டம் | அம்பலக்காரத் தெரு முதல் வலையர் தெரு வரை தார்சாலை அமைத்தல் | திரு.V.மூர்த்தி, இராமநாதபுரம் | 98.50 |
| 2. | 2021–2022 | நமக்கு நாமே திட்டம் | காந்தி நகர், தேசிய நெடுஞ்சாலை அருளாணந்தர் சர்ச் மற்றும் டி.நகர் மாரியம்மன் கோவில் சுற்றி சிமெண்ட் கான்கிரிட் பேவர் பிளாக் தளம் அமைத்தல் | திரு.V.மூர்த்தி, இராமநாதபுரம் | 13.00 |
| 3. | 2022–2023 | தூய்மை இந்தியா இயக்கம் 2.0 | வளம்மீட்பு பூங்காவில் ஈர உலர் தளம் (3.00 Ton Wed Waste) அமைத்தல். | திரு.M.K.திருமுருகன், இராமநாதபுரம் | 39.50 |
| 4. | 2022–2023 | 15வது நிதிக்குழு மான்யம் டைய்டு மானியம் 1வது தவணைத் தொகை | 11வது வார்டு மண்டபம் பேரூராட்சி அலுவலக வளாகத்தில் தூய்மைப்பணியாளர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு கழிப்பறை உடன் ஓய்வு மற்றும் உணவு அருந்தும் கூடம் அமைத்தல். | திருமதி.B.முனிஸ்வரி, மண்டபம் | 8.00 |
| 5. | | | 14வது வார்டு தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பொது மயானத்தை சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல். | | 5.25 |
| 6. | 2022–2023 | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 1வது வார்டு மீனவர் குடியிருப்பு குறுக்கு தெரு, 1வது வார்டு முனைக்காடு, 2வது வார்டு ஏகேஎஸ் தோப்பு முல்லை நகர் குறுக்கு தெரு, 10 வது வார்டு மோதின் தெரு, மரைக்காயர் குறுக்கு தெரு, 3வது வார்டு டி.நகர் குறுக்கு தெரு, 6வது வார்டு அம்பலக்காரத்தெரு மற்றும் 7வது வார்டு கிழக்கு குறுக்கு தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | KA BRICKS Kulithalai | 171.00 |

இதுபோல் பல வளம் பகுதிகளிலும், மண்டபம் பேரூராட்சிக்கு உட்பட்ட பல இடங்களிலும் அரசு திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு மண்டபம் பேரூராட்சி சாதனை ஊராட்சியாக திகழ்ந்து வருகிறது



த.ராஜா
தலைவர், மண்டபம் பேரூராட்சி

சிம்ரன்ஜீத்சிங் காலோன் இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், இராமநாதபுரம் மாவட்டம்.

சுப.சத்தியமூர்த்தி
பேரூராட்சிகளின் இணை இயக்குநர், சிவகங்கை.

செ.மாலதி
செயல் அலுவலர் (பொ), மண்டபம் பேரூராட்சி.

சு.முனியசாமி, இளநிலை உதவியாளர், மண்டபம் பேரூராட்சி.



மு.நம்புராஜன்
துணைத் தலைவர், மண்டபம் பேரூராட்சி

ஊராட்சி உறுப்பினர்கள் : ச.கலாவதி (1–வது வார்டு), கா.சம்பத்ராஜா (2–வது வார்டு) ரா.ஜெயந்தி (3–வது வார்டு) அ.ஜன்னத் சகிலா (4–வது வார்டு), மு.வாசிம் அக்ரம் வரிவிதிப்பு மேல் முறையீடு குழு உறுப்பினர் (5–வது வார்டு), வே.முருகானந்தம் வரிவிதிப்பு மேல் முறையீடு குழு உறுப்பினர் (6–வது வார்டு), ந.பூவேந்திரன் வரிவிதிப்பு மேல் முறையீடு குழு உறுப்பினர் (7–வது வார்டு), மு.சித்ராதேவி (8–வது வார்டு), செ.சாதிக்பட்சா பணி நியமன குழு உறுப்பினர் (9–வது வார்டு), மு.முகமது மீரா சாகிபு வரிவிதிப்பு மேல் முறையீடு குழு உறுப்பினர் (10–வது வார்டு). இ.முபாரக் (11–வது வார்டு), ம.சைலாஜா ஆனந்தி (12–வது வார்டு), கா.சீதாலெட்சுமி (13–வது வார்டு), ச.உமா மகேஸ்வரி (14–வது வார்டு), மு.கல்யாணி (15–வது வார்டு), ந.மகேஸ்வரி (16–வது வார்டு),

**மார்க்கெட் விலை நிலவரம்**

BSE - 176.43 பாயிண்ட் 83,536.08
NSE - 46.40 பாயிண்ட் 25,476.10

**தங்கம்** 1 சவரன் ₹72,000 1 கிராம் ₹9,000

**வெள்ளி** 1 கிலோ ₹120,000 1 கிராம் ₹120.00

**டாலர்** ₹85.69

**பெட்ரோல்** ₹100.75 டீசல் ₹92.34

### மாணவர்கள், சுற்றுலா பயணிகள்

# விசா பெறும் நடைமுறைகளை கடுமையாக்கியது அமெரிக்கா

**வாஷிங்டன், ஜூலை 10-**

மாணவர்கள், சுற்றுலா பயணிகள் உள்ளிட்டோருக்கான விசா பெறுவதற்கான நடைமுறையை அமெரிக்கா கடுமையாக்கியுள்ளது.

எச்-1பி விசா என்பது தொழில்நுட்ப திறன் வாய்ந்த பணியாளர்கள் தற்காலிக அடிப்படையில் அமெரிக்காவுக்குள் நுழைய அனுமதி அளிக்கிறது. அதேபோல, படிக்க வரும் மாணவர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் தனித்தனி விசாக்கள் உண்டு. இதனிடையே, கடந்த ஜூலை 4ம் தேதி 'ஒரு மிகப்பெரிய அழகிய மசோதா' என்ற மசோதாவில் அதிபர் டிரம்ப் கையெழுத்திட்டு, அதனை சட்டமாக்கினார். அதன்படி, தொழில்முனைவோர்கள், மாணவர்கள், சுற்றுலாப் பயணிகளுக்கான விசா பெறுவதற்கு, ஒரு குறிப்பிட்ட தொகையை வைப்பு தொகையாக செலுத்த வேண்டும். பணவீக்கத்தின் அடிப்படையில் ஆண்டுதோறும் இந்தக் கட்டணம் மாறுபடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



2026-ம் ஆண்டு முதல் அமலுக்கு வரும் இந்தத் திட்டத்தின் கீழ், அனைத்து குடியுரிமை இல்லாத விசா விண்ணப்பங்களுக்கும் இது பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. டிப்ளோமேடிக் விசாக்கள் மட்டும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தற்போது சுற்றுலா மற்றும் பணிபுரிவதற்காக செல்பவர்களுக்கன பி-1, பி-2 விசாவுக்கு ரூ.15,855 கட்டணமாகும். அதோடு, ஒருங்கிணைந்த கட்டணம் ரூ.21,000, உள்பட பிற கட்டணங்களுடன் சேர்த்து ரூ.40,456 செலுத்த வேண்டும்.

இது வழக்கமான விலையை விட கிட்டத்தட்ட இரண்டரை மடங்கு அதிகம். இதில், வைப்புத் தொகையை திரும்பப் பெற, விசா காலக்கெடுவுக்கு 5 நாட்களுக்குள் அமெரிக்காவை விட்டு வெளியேற வேண்டும் உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க அரசின் இந்த புதிய நடைமுறையினால் சுற்றுலாப் பயணிகள் மற்றும் மாணவர்களுக்கு நிதிச்சுமை அதிகரிக்கிறது. எனவே, அமெரிக்காவுக்கு சுற்றுலா மற்றும் கல்வி பயில்வோர்களின் எண்ணிக்கை குறைய வாய்ப்புள்ளது.

### பிரான்சில் திடீர் காட்டுத்தீ:

# 700 ஹெக்டேர் நிலப்பரப்பு எரிந்து நாசம்

**பாரீஸ், ஜூலை 10-**

பிரான்சில் காட்டுத்தீக்கு 13 பேர் காயம் அடைந்தனர். இதில் 700 ஹெக்டேர் நிலப்பரப்பு தீயில் எரிந்தது.

பிரான்ஸ் நாட்டின் தெற்கு துறைமுக நகரான மார்ஷெல் நகரில் காட்டுத்தீ ஏற்பட்டு பரவி வருகிறது. இதனால், விமானம், பஸ், ரெயில் சேவைகளும் முடங்கின. முக்கிய சாலைகள் மற்றும் பல்வேறு சுரங்க பாதைகளும் மூடப்பட்டு உள்ளன. பிரான்சின் 2-வது மிக பெரிய விமான நிலையங்களில் ஒன்றான மார்ஷெல்லே விமான நிலையத்தில் விமான சேவை கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து, பிரான்சின் பவுசஸ்-டு-ரோனி, வார் மற்றும் வாகுளூஸ் ஆகிய 3 தெற்கு பகுதி நகரங்களில் சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது. அந்த நகரத்தின் மேயர் பென்வாயிட் பாயன் மக்களுக்கு எச்சரிக்கை விட்டுள்ளதுடன், தொடர்ந்து வீடுகளிலேயே பாதுகாப்பாக இருக்கும்படி கேட்டு கொண்டார்.

இந்த காட்டுத்தீயில் சிக்கி 13 பேர் காயம் அடைந்தனர். அவர்களில் 9 பேர் தீயணைப்பு வீரர்கள் ஆவர். இதனால், அந்த பகுதியில் சிகரெட் பிடிக்க தடை செய்யப்பட்டு உள்ளதுடன் தீப்பற்ற கூடிய பொருட்களுக்கும் தடை விதிக்கப்பட்டு உள்ளது. 720 தீயணைப்பு வீரர்கள் பணியில் உள்ளனர். 220 தீயணைப்பு வாகனங்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன. ஹெலிகாப்டர்கள் மற்றும் நீர் தெளிக்கும் விமானங்களும் சம்பவ பகுதியில் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு உள்ளன. இதில், நூற்றுக்கணக்கான வீடுகள் பாதுகாக்கப்பட்டு உள்ளன. எனினும், 700 ஹெக்டேர்கள் பரப்பிலான நில பகுதிகள் தீயில் எரிந்து போயுள்ளன. 10 கட்டிடங்களும் சேதமடைந்து உள்ளன என தகவல் தெரிவிக்கின்றது.

# டெக்ஸாஸ் வெள்ளம்: பலி 109 ஆக உயர்வு

**டெக்ஸாஸ், ஜூலை 10-**

டெக்ஸாஸில் ஏற்பட்ட திடீர் கடும் வெள்ளப்பெருக்கு காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 109 ஆக உயர்ந்துள்ளது.

டெக்ஸாஸில் ஏற்பட்ட திடீர் கடும் வெள்ளப்பெருக்கு காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 109 ஆக உயர்ந்துள்ளது. இதில், குவாடலூப் நதிக்கரையில் அமைந்திருந்த கேம்ப் மிஸ்டிக் என்ற கோடைகால முகாமில் 28 சிறுமிகளும் அடங்குவர்.

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தில் உள்ள மத்திய கொர் கவுண்டி மாவட்டத்தில் பெய்த பலத்த மழையால வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. சில மாதங்கள் பெய்ய வேண்டி மழை, சில மணி நேரங்களில் பெய்ததால் 2 மணி நேரத்தில் குவாடலூப் நதியின் நீர்மட்டம் கிடுகிடுவென 33 அடி உயர்ந்தது. இதனால் ஆற்றில் இருந்து வெளியேறி தண்ணீர் ஊருக்குள் புகுந்தது. இந்த தீடீர் வெள்ளத்தால் வீடுகள், வாகனங்கள் அடித்து செல்லப்பட்டன. பலர் வீடுகளின் மேற்கூரையில் தஞ்சம் அடைந்தனர்.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், கொர் கவுண்டி மாவட்டத்தில் கனமழை வெள்ளத்திற்கு இதுவரை 109 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 28 சிறுவர்களும் அடங்குவர். மேலும் மாகாணத்தின் பிற பகுதிகளில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. 160-க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என்று அஞ்சப்படுவதாக கூறினர்.

### உணவு கெட்டுப்போனதாக கூறி

# ஊழியரை தாக்கிய சிவசேனா எம்.எல்.ஏ.

**மும்பை, ஜூலை 10-**

மகாராஷ்டிரத்தில் உணவு கெட்டுப்போனதாகக் கூறி உணவக ஊழியரை, சிவசேனை எம்.எல்.ஏ. சஞ்சய் கெய்க்வாட் தாக்கிய வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

மகாராஷ்டிர மாநிலம் புல்தானா தொகுதி ஏக்நாத் ஷிண்டே தரப்பு சிவசேனை எம்.எல்.ஏ. சஞ்சய் கெய்க்வாட். இவர் மும்பை சர்ச் கேட்டில் உள்ள எம்.எல்.ஏ. விடுதியில் தங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) இரவு தனக்கும் தன்னுடன் இருந்தவர்களுக்கும் இவர் உணவு கேட்க, ஊழியர் ஒருவரும் உணவு கொண்டு வந்து கொடுத்துள்ளார். ஊழியர் கொண்டுவந்த பருப்பு குழம்பைச் சாப்பிட்டு பார்த்த எம்.எல்.ஏ., இது கெட்டுபோனது என்று கூறி உணவகத்திற்குச் சென்று ஊழியர்களிடம் வாக்குவாதம் செய்துள்ளார். இதை சமைத்தவர் யார் என்று கேட்டு அவரை வரவழைத்து கடுமையாக முகத்தில் தாக்கியுள்ளார். இதனால் ஊழியர் கீழே விழுந்தார். இதுதொடர்பான விடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

"உணவைச் சாப்பிட்டவுடன் எனக்கு வயிறு வலி, தலைச்சுற்றல் ஏற்பட்டது. எம்.எல்.ஏ.வுக்கே இந்த நிலைமை என்றால்.. மற்றவர்களுக்கு? நான் செய்தது தவறு அல்ல, இதற்காக நான் மன்னிப்பு கேட்க முடியாது. உணவு சரியில்லை என்று பல ஆண்டுகளாகக் கூறி வருகிறேன், கேட்கவில்லை என்றால் இப்படித்தான். நான் எம்.எல்.ஏ. மட்டுமல்ல, ஒரு போராளியும்கூட. சொல்வதை கேட்கவில்லை என்றால் பால் தாக்கரே எங்களுக்கு சொல்லி கொடுத்தது இதுதான். இது சிவசேனை ஸ்டைல். மகாராஷ்டிரத்தில் மழைக்கால கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில் இதுகுறித்து சட்டப்பேரவையில் குரல் எழுப்புவேன்'' என்று தெரிவித்துள்ளார்.

# தங்கம் விலை சற்று சரிவு

**சென்னை, ஜூலை 10-**

இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்தே தங்கத்தின் விலை யாரும் எதிர்பார்க்காத வகையில் உயர்ந்தவாறு இருக்கிறது. அந்த வகையில், கடந்த மாதம் 14-ந் தேதி வரலாறு காணாத வகையில் தங்கம் விலை உயர்ந்து ஒரு கிராம் ரூ.9,320-க்கும், ஒரு சவரன் ரூ.74,560-க்கும் விற்பனையானது. அதன் பின்னர் தங்கம் விலை தொடர்ந்து ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்டு வருகிறது. நேற்றுமுன்தினம் ஒரு பவுன் ரூ.72 ஆயிரத்து 80-க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்த சூழலில் தங்கத்தின் விலை நேற்று முன்தினம் சற்று உயர்ந்தது. ஒரு கிராம் தங்கம் ரூ.50 உயர்ந்து ரூ.9 ஆயிரத்து 60-க்கும், ஒரு பவுன் ரூ.400 உயர்ந்து ரூ.72 ஆயிரத்து 480-க்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில் நேற்று தங்கம் விலை சற்று குறைந்து விற்பனையானது. அதன்படி சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.400 குறைந்து ஒரு சவரன் ரூ.72,000-க்கு விற்பனையானது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.60 குறைந்து ஒரு கிராம் ரூ.9,000-க்கு விற்பனையானது. வெள்ளி விலையில் மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.120-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 20 ஆயிரத்திற்கும் விற்பனையானது.

### ஆசியாவின் அதிக வயதான யானை உயிரிழப்பு



**போபால், ஜூலை 10-**

ஆசியாவிலேயே அதிக வயதான யானை வட்சலா உயிரிழந்தது.

ஆசியாவிலேயே அதிக வயதான யானையாக வட்சலா திகழ்ந்தது. 100 வயதான வட்சலா பெண் யானை மத்தியபிரதேசத்தின் பனா புலிகள் சரணாலயத்தில் வாழ்ந்து வந்தது. ஆசியாவிலேயே வயதான யானை என்பதால் வட்சலாவை காண பனா சரணாலயத்திற்கு ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிந்து வந்தனர்.

இந்நிலையில், ஆசியாவிலேயே அதிக வயதான யானை வட்சலா நேற்று முன்தினம் உயிரிழந்தது. கால் நகங்களில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்டுவந்த யானைக்கு பனா சரணாலயத்தில் மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வந்தனர். ஆனால், சிகிச்சை பலனின்றி வடலா யானை உயிரிழந்தது. யானைக்கு வனத்துறை அதிகாரிகள், ஊழியர்கள் அஞ்சலி செலுத்தினர். பின்னர், யானையின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

### மத்திய அரசை கண்டித்து

# தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொழிற்சங்கத்தினர் போராட்டம்

**சென்னை, ஜூலை 10-**

மத்திய அரசை கண்டித்து நேற்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொழிற்சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடு முழுவதும் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும். குறைந்த பட்ச ஊதிய உயர்வை அதிகரிக்க வேண்டும். பொதுத் துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்குவதை கைவிட வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும், 42 தொழிலாளர் நல சட்டங்களை திரும்ப பெற கோரி வலியுறுத்தியும் நேற்று இந்தியா முழுவதும் வேலை நிறுத்தம் போராட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் இந்த போராட்டத்துக்கு தி.மு.க.வின் தொழிற்சங்கமான தொ.மு.ச., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தொழிற்சங்கமான சி.ஐ.டி.யு., இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தொழிற்சங்கமான ஏ.ஐ.டி.யூ.சி., காங்கிரஸ், ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள் உள்பட மற்ற கட்சிகளை சேர்ந்த தொழிற்சங்கங்கள் உள்பட 13 தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்தன.

இந்த நிலையில் சென்னையில் அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் போராட்டம் நடைபெற்றன. சென்னை பேருந்து நிலையம் அருகே அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் மத்திய அரசை கண்டித்து பல்வேறு தொழிற்சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொழிற்சங்கத்தினர் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

**10-07-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும். இறைவன் திருவருளால் வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். மனதிற்கினிய நல்ல மனைவி அமைவாள்.

**ரிஷபம்:-** நியாயமாக நடக்க வேண்டிய நாள். அஜீரணக் கோளாறுகள் ஏற்படும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் பணியில் அனுகூலமான சூழல் உருவாகும்.8

**மிதுனம்:-** புதிய தொழில்கள் தொடங்க சாதகமான சூழ்நிலை அமையும். எதிர்பார்த்த தன வர வால் ஏற்றம் வரும். மண வாழ்க்கையில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கனவுகள் இனிமை தரும்.

**கடகம்:-** இனிய பேச்சால் பெண்கள் மூலம் ஆதாயம் அடைவீர்கள். மாணவர்களுக்கு கல்வி சிறக்கும். அரசு பணியில் உள்ளவர்கள் பதவி உயர்வை எதிர்பார்க்கலாம்.

**சிம்மம்:-** குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. அதிகாரிகள் கெடுபிடியால், உழைப்பின் பயனை அனுபவிக்க முடியாது. உணர்வு பூர்வமான விஷயங்கள் வீட்டில் விவாதிக்காதிருப்பது நல்லது.

**கன்னி:-** சமாளிக்க முடியாத செலவுகள் ஏற்படும். கடன் பெற நேரும். நண்பர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை.

**துலாம்:-** தனலாபம் பெருகும். நவீன பொருட்களின் விற்பனை லாபத்தை அள்ளித்தரும். திட்டங்களைத் திறம்படத் தீட்டினால் தொழில் வளம் பெருகும். பயணம் பயன் அளிக்கும்.

**விருச்சிகம்:-** கூட்டாளிகளின் சதியால் வியாபாரம் குறையும். மனைவியுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள்.

**தனுசு:-** எதிர்பாராத பயணங்களால் இன்பம் பெருகும். அன்பு நண்பர்கள் மூலம் அதிக உதவி உண்டு. எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும்.

**மகரம்:-** பெரிய மனிதர்களிடம் ஒத்துப்போகாத நிலை ஏற்படும். கல்வியில் தடைகள் ஏற்படலாம். வியாபாரத்தில் வெற்றி பெற கடின உழைப்பு தேவை. சுகமும் குறையும்.

**கும்பம்:-** எல்லா வளமும் பெறும் இனிய நாள். பெண்களால் இலாபம் ஏற்படும். உல்லாசப் பயணங்கள் மூலம் உள்ளம் மகிழும். தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுப காரியங்கள் நிறைவேறும்.

**மீனம்:-** பொதுவாழ்க்கை ஈடுபாடு, வியாபாரத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தும். எல்லா விதத்திலும் பூரண சுகம் கிடைக்கும். செல்வ நிலை சீராக உயரும். அரசால் ஆதாயங்கள் ஏற்படும்.

# பிரதமர் நரேந்திர மோடிக்கு நமீபியாவில் உற்சாக வரவேற்பு

### மேளம் கொட்டி உற்சாகம்



**விந்தோக், ஜூலை 10-**

நமீபியா சென்ற பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டு உள்ளது. அங்கு மேளம் கொட்டி பிரதமர் மோடி மகிழ்ந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

கானா, டிரினிடாட் அண்டு டொபாகோ, அர்ஜென்டினா, பிரேசில் ஆகிய நாடுகளுக்கு சென்ற பிரதமர் மோடி, அடுத்த கட்டமாக ஆப்பிரிக்க நாடான நமீபியாவுக்கு சென்றார். நமீபியாவின் விண்ட்ஹோக்கில் தரையிறங்கிய மோடியை அந்நாட்டு அதிபர் நெட்டம்போ நந்தி எண்டைட்வா நேரில் வந்து வரவேற்றார்.

பிரதமர் மோடிக்கு அந்நாட்டின் பாரம்பரிய முறைப்படி, வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு குதூகலமாக பிரதமர் மோடி மேளம் கொட்டி மகிழ்ந்தார். நமீபியா அதிபருடன் இருதரப்பு பேச்சுவார்த்தையை மோடி நடத்த உள்ளார். அந்நாட்டு பார்லியிலும் உரையாற்ற உள்ளார்.

இது குறித்து பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: சற்று முன்பு விண்ட்ஹோக்கில் தரையிறங்கினேன். நமீபியா, இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கு இடையே இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க நாங்கள் விரும்புகிறோம். நமீபியா பார்லிமென்டில், உரையாற்ற ஆவலுடன் காத்திருக்கிறேன். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

முன்னதாக பிரேசிலில் நடைபெற்ற 17-ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் ஜூலை 6, 7 தேதிகளில் உலகத் தலைவர்களுடன் கலந்து கொண்டு மோடி பேச்சுவார்த்தை நடத்தினார்.

# நீதிமன்றத்தைவிட ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மேலானவரா..?

### அரசு அதிகாரிக்கு நீதிபதி கேள்வி

**சென்னை, ஜூலை 10-**

ஐ.ஏ.எஸ். அதிகாரி என்றால் நீதிமன்றத்தைவிட மேலானவர் என தன்னை நினைத்துக் கொள்கிறாரா? என சென்னை மாநகராட்சி ஆணையருக்கு கேள்வி எழுப்பிய சென்னை உயர் நீதிமன்றம் நேரில் ஆஜராக வேண்டுமென உத்தரவிட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியின் ஐந்தாவது மண்டலத்தில் உள்ள சட்ட விரோத கட்டுமானங்களுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி சென்னையைச் சேர்ந்த வழக்கறிஞரும், முன்னாள் கவுன்சிலருமான ருக்மாங்கதன் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், ஐந்தாவது மண்டலமான ராயபுரத்தில் உள்ள விதிமீறல் கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டது. இதேபோல பிற மண்டலங்களில் உள்ள சட்டவிரோத கட்டுமானங்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டது. கடந்த 2021 டிசம்பரில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறி, சென்னை மாநகராட்சி ஆணையருக்கு எதிராக ருக்மாங்கதன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு, நேற்று முன்தினம் (ஜூலை 8) தலைமை நீதிபதி ஸ்ரீராம் மற்றும் நீதிபதி சுந்தர்மோகன் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தாதது ஏன் என கேள்வி எழுப்பியது. உத்தரவை அமல்படுத்தாததற்காக சென்னை மாநகராட்சி ஆணையருக்கு ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதித்த நீதிபதிகள், இத்தொகையை ஆணையரின் ஊதியத்தில் இருந்து பிடித்தம்செய்து, அதை அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு வழங்க உத்தரவிட்டனர்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக தலைமை நீதிபதி அமர்வில் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் முறையிட்டார். அப்போது, அபராதம் செலுத்த வேண்டுமென்ற உத்தரவை நிறுத்தி வைக்குமாறு கோரிக்கை வைத்தார். மேலும், இந்த விவகாரத்தில் தங்களது தரப்பில் தான் தவறு இருப்பதாகவும் கூடுதல் தலைமை வழக்கறிஞர் கூறினார்.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி, வழக்கறிஞர்கள் தவறான பிரமாண பத்திரத்தை கொடுத்திருந்தாலும் அதனை படித்துப் பார்த்து கையெழுத்திட்டிருக்க வேண்டுமெனவும், அப்படி செய்யவில்லை என்றால் அவர் ஆணையராக இருக்கவே தகுதியில்லாதவர் எனவும் கூறினார். ஐ.ஏ.எஸ்.. அதிகாரி என்றால் நீதிமன்றத்தை விட மேலானவர் என தம்மை நினைக்கிறாரா?. நீதிமன்றத்தின் அதிகாரத்தை நாங்கள் காட்டலாமா? எனவும் காட்டமாக தலைமை நீதிபதி கேள்வி எழுப்பினார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் அவர் ஏன் ஆஜராகவில்லை என கேள்வி எழுப்பிய தலைமை நீதிபதி, உரிய பிரமாணப் பத்திரத்துடன் இன்று ஆஜராக வேண்டுமென ஆணையருக்கு உத்தரவிட்டார். அபராதம் குறித்து பின்னர் முடிவு செய்து கொள்ளலாம் எனவும் தலைமை நீதிபதி கூறினார்.

# குஜராத்: பால விபத்தில் பலி எண்ணிக்கை 10 ஆக உயர்வு

**ஆனந்த், ஜூலை 10-**

குஜராத்தில் திடீரென பாலம் இடிந்து வாகனங்கள் ஆற்றில் விழுந்தது இதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.



குஜராத் மாநிலத்தின் ஆனந்த் மாவட்டத்தில் 45 ஆண்டுகள் பழமையான பாலம் ஒன்று உள்ளது. வதோதரா நகரில் இருந்து 25 கி.மீ. தொலைவில் அமைந்த இந்த பாலம், மாவட்டத்தின் முஜ்பூர் மற்றும் கம்பீரா பகுதிகளை இணைக்கிறது. சவுராஷ்டிரா பகுதியையும் கூட இந்த பாலம் இணைக்கிறது.

இந்நிலையில், நேற்று காலை 7.30 மணியளவில் இந்த பாலம் திடீரென இடிந்து விழுந்தது. இதனால், பாலத்தில் சென்று கொண்டிருந்த பைக், கார் உள்ளிட்ட வாகனங்களும், லாரி உள்ளிட்ட கனரக வாகனங்களும் மகிசாகர் ஆற்றில் கவிழ்ந்தன. அப்போது லாரி ஒன்று அந்தரத்தில் தொங்கியபடி இருந்தது. பாலத்தில் பல அடி உயரத்தில் இருந்து வாகனங்கள் கீழே விழுந்த இந்த சம்பவத்தில் பலர் காயமடைந்தனர். இதுபற்றி தகவல் அறிந்து போலீசார், பேரிடர் மீட்பு படையினர் உடனடியாக சம்பவ பகுதிக்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். அவர்களுடன் உள்ளூர்வாசிகளும் இணைந்து கொண்டனர்.

இந்த விபத்தில் பலி எண்ணிக்கை 10 ஆக உயர்ந்து உள்ளது. 4 பேர் மீட்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து மீட்பு நடவடிக்கை நடைபெற்று வருகிறது என பத்ரா காவல் நிலைய ஆய்வாளர் விஜய் சரண் தெரிவித்துள்ளார். மிக பழமையான இந்த பாலம் முறையாக பராமரிக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டு கூறப்படுகிறது.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

## ‘வள்ளுவர் மறை வைரமுத்து உரை’
# 13-ம் தேதி வெளியிடுகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, ஜூலை 10**

வள்ளுவர் மறை வைரமுத்து உரை’ என்ற பெயரில் கவிஞர் வைரமுத்து திருக்குறளுக்கு உரை எழுதியிருக்கிறார். வரும் ஜூலை 13, ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குச் சென்னை காமராசர் அரங்கத்தில் நூல் வெளியிடப்படுகிறது. முதல்வர் மு.க.ஸ்டாலின் விழாவுக்குத் தலைமையேற்று நூலை வெளியிடுகிறார்.



இந்தியப் பேரரசின் முன்னாள் நிதியமைச்சரும் மற்றும் உள்துறை அமைச்சருமான ப.சிதம்பரம் எம்.பி நூலின் முதற்படியைப் பெற்றுக்கொள்கிறார். தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு ஐ.ஏ.எஸ் மற்றும் தமிழ்ப் பேராசிரியர் பர்வீன் சுல்தானா இருவரும் வாழ்த்திப் பேசுகிறார்கள். நிறைவாக கவிஞர் வைரமுத்து ஏற்புரை ஆற்றுகிறார்.

திருக்குறளுக்குக் காலந்தோறும் உரை எழுதப்பட்டு வந்திருக்கிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் தாம்கற்ற கல்வி - சார்ந்த கொள்கை - சமுதாயச் சூழலுக்கு ஏற்ப உரையாசிரியர்கள் உரை எழுதி வந்திருக்கிறார்கள். தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதியார், பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காலிங்கர் பிற்காலத்தில் வ.உ.சிதம்பரனார், திரு.வி.கல்யாணசுந்தரனார், தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், ஞா.தேவநேயப் பாவாணர், நாமக்கல் கவிஞர், மு.வரதராசனார், புலவர் குழந்தை, சி.இலக்குவனார், கலைஞர், நாவலர் என்று பலரும் உரை எழுதியிருக்கிறார்கள்.

தாம் எழுதிய உரை மாறுபட்டது என்று கவிஞர் வைரமுத்து தெரிவிக்கிறார். அறவியலுக்காக எழுதப்பட்ட திருக்குறளுக்கு அறிவியலின் படி உரை எழுதியிருப்பதாக அறிவிக்கிறார். இது டிஜிட்டல் தலைமுறைக்கானது; மின்னல் தெறிக்கும் மொழியில் எழுதப்பட்டது; எளிமையும் துல்லியமும் உடையது; பண்டிதரையும் பாமரரையும் ஒருசேரச் சென்றடைவது. அறத்துப்பாலும் பொருட்பாலும் ஞானத் தமிழில் எழுதப்பட்டது; இன்பத்துப்பால் கவிதை மொழியில் எழுதப்பட்டது என்கிறார் கவிஞர் வைரமுத்து.

மூலத்தைவிடப் பல உரைகள் கடினமாக இருக்கின்றன என்பது பொதுவான குற்றச்சாட்டு. ஆனால், இது இலகுவான மொழியில் கவிதை கொஞ்சும் நடைமுறைத் தமிழில் எழுதப்பட்டுள்ளது என்பதனால் எவரும் படிக்க இயலும். ஒவ்வொரு தமிழரின் உள்ளத்திலும் இல்லத்திலும் இந்நூல் இருக்க வேண்டும் என்பது தன் இலக்கியக் குறிக்கோள் என்கிறார் கவிஞர் வைரமுத்து. ‘12 வயதில் நான் கண்ட கனவு 72 வயதில் நனவாகி இருக்கிறது’ என்று சொல்லும் கவிஞர் வைரமுத்து, என் பிறவிப் பெருங்கடமை நிறைவேறி இருக்கிறது என்கிறார்.

# ஜூலை 28-ல் நடைபெறுகிறது சி.எஸ்.ஐ.ஆர். நெட் தேர்வு

**சென்னை, ஜூலை 10-**

உதவி பேராசிரியர் பணிக்கான சி.எஸ்.ஐ.ஆர். நெட் தேர்வு ஒரேகட்டமாக ஜூலை 28-ம் தேதி நடைபெறுகிறது என்று என்டிஏ அறிவித்துள்ளது.

நம் நாட்டில் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் உதவி பேராசிரியராக பணிபுரியவும், இளநிலை ஆராய்ச்சி படிப்புக்கான மத்திய அரசின் உதவித்தொகை பெறவும் நெட் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். இந்த தேர்வு தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) சார்பில் ஆண்டுக்கு இருமுறை கணினிவழியில் நடத்தப்பட்டு வருகிறது. இதில் சி.எஸ்.ஐ.ஆர். நெட் தேர்வு சில அறிவியல் பாடப் பிரிவுகளுக்கு மட்டும் பிரத்யேகமாக நடத்தப்படும்.

அதன்படி நடப்பாண்டுக்கான 2-ம் கட்ட சி.எஸ்.ஐ.ஆர். நெட் தேர்வு ஜூலை 26 முதல் 28-ம் தேதி வரை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கான இணையதள விண்ணப்பப் பதிவு கடந்த ஜூன் 3-ல் தொடங்கி 26-ம் தேதியுடன் நிறைவு பெற்றது.

இதற்கு 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் விண்ணப்பித்துள்ளதாக தெரிகிறது. இதற்கிடையே ஹரியானா மாநிலத்தில் ஆசிரியர் தகுதிக்கான டெட் தேர்வு ஜூலை 26, 27-ம் தேதிகளில் நடைபெற வுள்ளது. இதனால் தேர்வு தேதியை மாற்ற வேண்டுமென என்டிஏ-வுக்கு பட்டதாரிகள் கோரிக்கை வைத்தனர்.

அதையேற்று தேர்வுக்கால அட்டவணையில் என்டிஏ தற்போது மாற்றம் செய்துள்ளது. அதன்படி சி.எஸ்.ஐ.ஆர். நெட் தேர்வுகள் ஜூலை 28-ம் தேதி ஒரேகட்டமாக நடத்தப்பட உள்ளது.

இந்த தேர்வு ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் மட்டுமே நடைபெறும். ஹால்டிக்கெட் வெளியீடு உட்பட கூடுதல் விவரங்களை csirnet.nta.ac.in, nta.ac.in ஆகிய வலைத்தளங்களில் அறிந்து கொள்ளலாம்.

இதில் ஏதேனும் சந்தேகம் இருப்பின் மாணவர்கள் 011-40759000/ 69227700 என்ற தொலைபேசி மூலமாக அல்லது csirnet@nta.ac.in எனும் மின்னஞ்சல் வாயிலாக தொடர்புக் கொண்டு உரிய விளக்கம் பெறலாம் என்று என்டிஏ வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

## குஜராத்தில் பாலம் இடிந்து 10 பேர் பலி:
# நிவாரணம் அறிவித்தார் பிரதமர்

**காந்திநகர், ஜூலை 10-**

குஜராத் பாலம் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். மேலும், உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு பிரதமரின் நிவார நிதியில் இருந்து ரூ. 2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ. 50,000 நிவாரண நிதியும் வழங்கப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் ஆனந்த் மற்றும் வதோதரா மாவட்டங்களை இணைக்கும் வகையில் காம்பிரா - முக்பூர் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. வதோதராவின் பாத்ரா தாலுகாவில் மாஹி ஆற்றின் மேல் இந்த பாலம் இருக்கிறது. இந்த நிலையில் நேற்று காலை 7.30 மணியளவில் அந்த பாலத்தின் ஒரு பகுதி யாருமே எதிர்பாராத வகையில் இடிந்து விழுந்தது. 2 தூண்களுக்கு இடையே உள்ள பாலத்தின் முழு பகுதியும் இடிந்து விழுந்தது.

பாலம் இடிந்து விழுந்ததால் அங்கு வந்த பல வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மஹி சாஹர் ஆற்றில் விழுந்தன. முதல் கட்ட தகவல்கள் அடிப்படை யில் 2 லாரிகள், ஒரு கார், ஒரு வேன் ஆகிய வாக னங்கள் ஆற்றில் விழுந்ததாக தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயம் அடைந்தனர். இது பற்றி தகவல் அறிந்ததும் தீயணைப்பு வீரர்கள், போலீசார் சம்பவ இடத்துக்கு சென்றனர். ஆற்றில் பலர் மூழ்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

உள்ளூர் மக்களுடன் இணைந்து மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. காயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு அருகே உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 3 உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. இந்த பாலம் 40 ஆண்டுகள் பழமையானது. இதனால் பாலத்தின் உறுதி தன்மை பலவீனமாக இருந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், குஜராத் பாலம் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். மேலும், உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு பிரதமரின் நிவார நிதியில் இருந்து ரூ. 2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ. 50,000 நிவாரண நிதியும் வழங்கப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

இந்நிலையில், குஜராத் பாலம் விபத்தில் பலியானோர் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாய் வழங்கப்படும் எனவும், காயம் அடைந்தவர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ. 50,000 நிவாரண நிதியும் வழங்கப்படும் என முதல்வர் பூபேந்திர படேல் அறிவித்தார்.

# நம் உரிமைகளை பாதுகாக்கக்கூடிய ஆட்சி தி.மு.க. ஆட்சி மட்டும்தான்
## கனிமொழி எம்.பி. பேச்சு

**தூத்துக்குடி, ஜூலை 10-**

நம்முடை உரிமைகளையும் பாதுகாக்கக்கூடிய ஆட்சி தி.மு.க. ஆட்சி மட்டும்தான் என்று கனிமொழி எம்.பி. தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தி.மு.க. எம்.பி. கனிமொழி பேசியதாவது, இனிமேல் எந்த காலத்திலும் பா.ஜ.க.வோடு நாங்கள் கூட்டணி சேர மாட்டோம், அவங்க தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்கிறார்கள் என்று தொடர்ந்து சொல்லிவிட்டு, போன தேர்தலில் அவங்க கூட கூட்டணி இல்லை என்று சொல்லிவிட்டு, இப்போது திடீரென்று எல்லாவற்றையும் மறந்துவிட்டு கூட்டணி தேர்தல் வியூகம் அமைக்கிறோம் என்று சொல்லி யார் தமிழ் நாட்டுக்கு துரோகம் செய்கிறார்களோ அவர்களை விட மிகப்பெரிய துரோகிகளாக அ.தி.மு.க. அவங்ககூட போய் சேர்ந்துவிட்டது.அதனால் தான் அவர்களை வீடு வீடாக போய் அடையாளம் காட்டக்கூடிய வாய்ப்பு நமக்கு கிடைத்தது.

மத்திய அரசாங்கம் நம் தமிழ் அடையாளங்கள் மீது நம்முடைய சரித்திரத்தை மாற்றணும், மொழியை மாற்றணும், தொகுதி சீரமைப்பு என்று சொல்லி பாராளுமன்ற மக்களவை உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை குறைக்க நினைக்கக்கூடிய ஒரு பா.ஜ.க. அரசு ஆட்சி நடக்கிறது. இன்று 39 பேராக இருப்பது நாளை 20 பேராக குறைந்தால் அவ்வளவு பெரிய மன்றத்தில் நாம் பேசுவது எடுபடாது. அதனால் அந்தநிலையை நாம் அடைந்துவிடக்கூடாது என்று தொடர்ந்து எதிர்த்து போராடிக்கொண்டிருக்கின்றவர் நம் முதல்-அமைச்சர் .

புதிதாக அரசியலுக்கு வந்து ஜெயிச்சிருவேன் என்று நினைத்து எது மத்திய அரசாங்கம், எது மாநில அரசாங்கம் என்று வித்தியாசமே தெரியவில்லை. என்ன அழுத்தம் கொடுத்தாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சியை எந்த இடத்திலும் தடை இல்லாமல் கொண்டு சென்று, அதே நேரத்தில் நம்முடை உரிமைகளையும் பாதுகாக்கக்கூடிய ஆட்சி தி.மு.க. ஆட்சி மட்டும்தான் என்பதை எடுத்துச்சொல்லக்கூடிய ஒரு வாய்ப்பு இந்த வாய்ப்பு.இவ்வாறு அவர் கூறினார்.

## கடலூர் ரயில் விபத்து:
# கேட் கீப்பராக ‘தமிழர்’ நியமனம்

**சென்னை, ஜூலை 10-**

கடலூர் ரயில் விபத்தை அடுத்து அங்கு புதிய கேட் கீப்பராக தமிழர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



கடலூர் செம்மங்குப்பம் அருகே நேற்று முன்தினம் காலை பள்ளி வேன் ரயில்வே கேட்டை கடக்க முயன்றது. அப்போது பள்ளி வேன் மீது சிதம்பரம் நோக்கி சென்ற ரயில் மோதியது. இந்த சம்பவத்தில் 2 மாணவர்கள், ஒரு மாணவி என 3 பேர் உயிரிழந்தனர்.பள்ளி வேன் டிரைவரும், மற்றொரு மாணவனும் படுகாயங்களுடன் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்தின்போது ரயில்வே கேட் மூடப்படாமல் இருந்ததே விபத்துக்கு காராம் என தெரியவந்துள்ளது.

ரயில்வே கேட் கீப்பர் பங்கஜ் சர்மா பணியின்போது தூங்கியதே விபத்துக்கு காரணம் என பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக ரயில்வெ கேட் கீப்பர் பங்கஜ் சர்மாவை ரயில்வே சஸ்பெண்ட் செய்துள்ளது. மேலும், இந்த விபத்து தொடர்பாக பங்கஜ் சர்மாவை போலீசார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள ரயில்வே கேட் கீப்பர் பங்கஜ் சர்மா மீது 5 பிரிவுகளின்கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. ரயில்வே சட்டப்பிரிவுகளின் கீழ் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பப்ட்டுள்ளது.

இந்த நிலையில், செம்மங்குப்பம் ரயில் கேட்டில் புதிய கேட் கீப்பராக ஆனந்த ராஜ் என்பவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மத்திய பிரதேசத்தை சேர்ந்தவரை தமிழ் நாடில் நியமித்தது சர்ச்சையான நிலையில், தமிழர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ரயில்வே விதிகளை முறையாக பின்பற்ற வேண்டும் என தெற்கு ரயில்வே அறிவுறுத்தியதாக ஆனந்த ராஜ் கூறியுள்ளார்.

## அடிப்படை தேவைகளை நிறைவேற்ற வலியுறுத்தி
# திருத்தணியில் 14-ம் தேதி அ.தி.மு.க சார்பில் ஆர்ப்பாட்டம்: இ.பி.எஸ்.

**சென்னை, ஜூலை 10-**

திருத்தணியில் ஜவுளிப் பூங்கா மற்றும் தனி வாரியம் அமைக்கப்படும் என்ற தி.மு.க. வாக்குறுதி இதுநாள் வரையிலும் நிறைவேற்றப்படவில்லை என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



திருத்தணி தொகுதி வாழ் மக்களின் அத்தியாவசிய மற்றும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தரவும், மக்களின் அடிப்படைத் தேவைகளையும், நலன் பயக்கும் திட்டங்களையும் உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக திருவள்ளூர் மேற்கு மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்: 14.7.2025, திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம், திருத்தணி சட்டமன்றத் தொகுதியில் அத்தியாவசியத் தேவைகள் நிறைவேற்றப்படாத காரணத்தால், அப்பகுதிவாழ் மக்கள் மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து வருவதாக தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. பல்வேறு பிரச்சினைகளால் மக்கள் மிகுந்த வேதனைக்கு ஆட்பட்டுள்ளனர். மக்கள் நலனில் சிறிதும் அக்கறை இல்லாமல் இருந்து வரும் விடியா திமுக-வின் ஸ்டாலின் மாடல் அரசுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், கழக அமைப்புச் செயலாளரும், வட சென்னை தெற்கு (கிழக்கு) மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஜெயக்குமார் தலைமையிலும்; கழக அமைப்புச் செயலாளரும், திருவள்ளூர் மேற்கு மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளருமான திருத்தணி அரி, திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ரமணா ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழகச் செயலாளர், கழக சார்பு அணிகளின் துணை நிர்வாகிகள், முன்னாள் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர, பேரூராட்சி மன்ற முன்னாள் வார்டு உறுப்பினர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பிரதிநிதிகளும், கழக உடன்பிறப்புகளும் பெருந்திரளாகக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கணவர் மீது சட்டவிரோத பணப்பரிமாற்ற புகார்:
# ‘கல்லுக்குள் ஈரம்’ நடிகை அருணா வீட்டில் அமலாக்கத்துறை ரெய்டு

**சென்னை, ஜூலை 10-**

கணவர் மீதான சட்டவிரோத பணப்பரிமாற்ற புகாரை அடுத்து 1980-களில் பிரபலமாக இருந்த நடிகை அருணாவின் சென்னை வீட்டில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.



பாரதிராஜா இயக்கிய கல்லுக்குள் ஈரம்’ படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் நாயகியாக அறிமுகமானவர் நடிகை அருணா. தொடர்ந்து சிவப்பு மல்லி, நீதி பிழைத்தது,

நாடோடி ராஜா, டார்லிங் டார்லிங் டார்லிங், முதல் மரியாதை, கரிமேடு கருவாயன்’ உள்ளிட்ட ஏராளமான படங்களில் நடித்தார். மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய தென்னிய மொழிகளிலும் நடித்துள்ளார்.

இவரது கணவர் மோகன் குப்தா பிரபல தொழிலதிபர். வீடு, நிறுவனம் உள்ளிட்ட உள்கட்டமைப்புக்கான அலங்காரப் பணிகளை செய்யும் நிறுவனத்தை நடத்தி வருகிறார். சென்னை, நீலாங்கரையில் கணவர், பிள்ளைகளுடன் அருணா வசித்து வருகிறார்.

இந்நிலையில் மோகன் நடத்தி வரும் நிறுவனத்தில் சட்டவிரோத பணப்பரிமாற்றம் நடந்ததாக கிடைத்த புகார் அடிப்படையில் அமலாக்கத்துறையினர் இவரது வீடு, அலுவலங்களில் காலை முதல் சோதனையில் ஈடுபட்டனர். தொடர்ந்து மோகன், அருணா உள்ளிட்ட குடும்பத்தாரிடமும் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். இது அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சுங்கச்சாவடிகளில் அரசு பஸ்களுக்கு தடை? ஐகோர்ட்டில் அரசுத்தரப்பில் முறையீடு

**சென்னை, ஜூலை 10-**

தென்மாவட்டங்களில் உள்ள 4 சுங்கச்சாவடிகளில் நாளை (வியாழக்கிழமை) முதல் அரசு பஸ்களை அனுமதிக்கக்கூடாது என ஐகோர்ட்டு உத்தரவிட்டிருந்த நிலையில், அரசுத்தரப்பில் முறையீடு செய்யப்பட்டுள்ள நிலையில் இன்று சென்னை ஐகோர்ட்டில் மீண்டும் விசாரணை நடைபெறுகிறது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கள் சுங்கச்சாவடிகளுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.276 கோடியை செலுத்தாமல் நிலுவை வைத்துள்ளதாக கூறி மதுரை கப்பலூர், சாத்தூர் எட்டுர்வட்டம், கயத்தாறு சாலைப்புதூர் மற்றும் நாங்குநேரி சுங்கச்சாவடிகளை நிர்வகிக்கும் தனியார் நிறுவனங்கள் தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த நிறுவனங்கள் தாக்கல் செய்த மனுவில், ‘சுங்கச் சாவடிகளுக்கு அரசு போக்குவரத்து கழகம் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகையை விரைந்து வழங்க உத்தரவிட வேண்டும்’ என கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி பிறப்பித்த உத்தரவில், “போக்குவரத்து கழகங்கள் நிலுவைத்தொகையை செலுத்தாமல் பிரச்சினையை இழுத்துக்கொண்டே சென்றால் நிலுவைத்தொகை ரூ.300 கோடி, ரூ.400 கோடி என உயர்ந்துவிடும்.

அரசு அதிகாரிகள் இந்த பிரச்சினையின் தீவிரத்தை புரிந்துகொண்டு விரைந்து செயல்படாமல் இருப்பது கவலை அளிக்கிறது. சுங்கச்சாவடிகளில் அரசு பஸ் போக்குவரத்தை நிறுத்தி தீவிர நடவடிக்கையை மேற்கொள்ளாவிட்டால், நிலுவைத்தொகையை வசூலிக்க முடியாத நிலை உள்ளதாக சுங்கச்சாவடிகளை நிர்வகிக்கும் நிறுவனங்கள் தெரிவித்துள்ளது.

எனவே, கப்பலூர், எட்டுர்வட்டம், சாலைப்புதூர் மற்றும் நாங்குநேரி சுங்கச்சாவடிகள் வழியாக 10-ம் தேதி (இன்று) முதல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக பஸ்களை இயக்க அனுமதிக்கக்கூடாது. இந்த சுங்கச்சாவடிகளில் அசம்பாவிதங்கள் நடக்காமல் தடுக்க உரிய போலீஸ் பாதுகாப்பு வழங்க சம்பந்தப்பட்ட மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகளுக்கு டி.ஜி.பி. உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும்” என்று அந்த உத்தரவில் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில் ரூ.276 கோடி சுங்கக் கட்டணம் பாக்கியால் அரசு பஸ்களுக்கு அனுமதி மறுத்த விவகாரம் தொடர்பாக, சென்னை ஐகோர்ட்டில் தமிழக அரசுத் தரப்பில் முறையீடு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பான வழக்கு இன்று (ஜூலை10ம் தேதி) மீண்டும் விசாரணைக்கு வர உள்ளது. முன்னதாக இன்று நல்ல தீர்வுடன் வருவதாக அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன் முறையீடு செய்த நிலையில், இன்று காலை மீண்டும் விசாரிப்பதாக சென்னை ஐகோர்ட்டு நீதிபதி ஆனந்த வெங்கடேஷ் அறிவித்துள்ளார்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

## மத்திய அரசை கண்டித்து 'பந்த்':
# புதுச்சேரியில் கடைகள் அடைப்பு; தனியார் பேருந்துகள் ஓடவில்லை

**புதுச்சேரி, ஜூலை 10-**

மத்திய அரசை கண்டித்தும்,17 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தியும் புதுச்சேரியில் நேற்று (ஜூலை 9) பந்த் நடந்தது. கடைகள் அடைக்கப்பட்டு, தனியார் பேருந்து ஆட்டோ டெம்போக்கள் ஓடவில்லை. தனியார் பள்ளிகளுக்கு விடுமுறை விடபட்டுள்ளது. அதே நேரத்தில், விடுமுறை எடுக்க அரசு ஊழியர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசை கண்டித்தும், 17 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தியும் நேற்று நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்திற்கு அனைத்து தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்தன. இதனையடுத்து புதுச்சேரியில் பந்த் அறிவிக்கப்பட்டது. இதன்படி நேற்று காலை பந்த் போராட்டத்தை தொழிற்சங்கங்கள் தொடங்கின.

இதன் காரணமாக புதுச்சேரியில் தனியார் பேருந்து ஆட்டோ டெம்போக்கள் ஓடவில்லை. தனியார் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டிருந்தது. திரையரங்குகள், மதுபானக் கடைகள் மூடப்பட்டிருந்தன. சிறிய கடை முதல் பெரிய நிறுவனங்கள் வரை மூடப்பட்டிருந்தன. பந்த் போராட்டத்தில் அரசு ஊழியர்கள் பங்கேற்க கூடாது என அறிவுறுத்தியுள்ள தலைமைச் செயலகம், காலை 11 மணிக்குள் அனைத்து துறைகளிலும் வராதவர்கள் பெயர் பட்டியலை அனுப்ப உத்தரவிட்டிருந்தது.

இதனிடையே போலீஸ் பாதுகாப்புடன் அரசுப் பேருந்துகள் இயக்கப்பட்டன. பந்த் போராட்டத்தை ஒட்டி தனியார் பேருந்துகள், ஆட்டோக்கள், டெம்போக்கள் இயக்கப்படவில்லை. தமிழக மற்றும் புதுச்சேரி அரசின் பேருந்துகள் மட்டும் ஒருசில இடங்ளில் போலீசார் பாதுகாப்புடன் இயக்கப்பட்டன.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# கடலூர் ரயில் விபத்திற்கு காரணம்? வெளியான தகவலால் அதிர்ச்சி

**கடலூர், ஜூலை 10-**

ரயில் வரும் நேரத்தில் கேட் கீப்பர் பங்கஜ் சர்மா தூங்கி கொண்டிருந்ததால் விபத்து நேரிட்டதாக தகவல் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



கடலூர் மாவட்டம் செம்மங்குப்பம் அருகே ரயில்வே கேட்டை கடலூர் மாவட்டம் செம்மங்குப்பம் அருகே ரயில்வே கேட்டை கடக்க முயன்ற தனியார் பள்ளி வேன் மோதியதில் 3 மாணவர்கள் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த விபத்திற்கு ரயில்வே கேட்டை மூடாமல் ஊழியர் தூங்கிவிட்டதால் வேன் தண்டவாளத்தை கடந்த போது விபத்து நிகழ்ந்துள்ளது.

ஆனால் இதனை மறுத்த தென்னக ரயில்வே, விபத்திற்கு வேன் ஓட்டுநரே காரணம் என்றும் வேன் ஓட்டுநரின் வற்புறுத்தலின் பேரிலேயே கேட் கீப்பர் கேட்டை திறந்ததாக கூறியது. இதற்கு வேன் டிரைவர் மறுப்பு தெரிவித்தார். அவர் கூறுகையில், கேட் கீப்பரை பார்க்கவில்லை. கேட் திறந்தே இருந்தது. ரயில் வரும் ஒலிக் கூட கேட்கவில்லை என்று கூறினார்.

இந்த நிலையில், பயணிகள் ரயில் கடக்கும் முன் தொலைபேசியில் அ ழைப்பு வந்தும் பங்கஜ் ச ர்மா பதிலளிக்கவில்லை எ ன்று தற்போது தகவல் வெளியாகி உள்ளது. அதிகாரி விமல் தொலைபேசியில் அழைத்த நிலையில், கேட் கீப்பர் பங்கஜ் சர்மா உறங்கி விட்டதாக கூறப்படுகிறது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



விஜய் பெரியாரை தனது கொள்கைத் தலைவராக ஏற்றிருப்பதாகக் கூறியுள்ளார். பெரியாரின் கொள்கைகளைப் பின்பற்றுபவர் ஒருவருடன் இணைந்து அரசியல் செய்வது மிகவும் கடினமானது. எங்களின் தமிழ்த் தேசியக் கொள்கைகளும், பெரியாரின் கொள்கைகளும் ஒருபோதும் ஒத்துப்போகாது.

**- சீமான்**



தி.மு.க.வுக்கு எதிராக அணி திரள்பவர்கள் கூட்டணி ஆட்சி முழுக்கத்தை வைத்துள்ளனர். பா.ஜ.க.வால் அ.தி.மு.க.விற்கு ஏற்படும் பாதிப்பை அறியாமல் இருக்கிறார் இ.பி.எஸ். அ.தி.மு.க. தோழமை கட்சி என கருதுவதால்தான் கூட்டணி குறித்து விமர்சிக்கிறோம். அ.தி.மு.க. எடுத்த கூட்டணி முடிவில் அவர்களுக்கே சந்தேகம் உள்ளது.

**- திருமாவளவன்**



மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீர் உபரி நீராக காவிரியில் திறக்கப்பட்டு அதிகளவில் கடலில் கலக்கிறது. இப்படி நடவாது தடுத்தால் மட்டுமே 85 ஏரிகளும், குளங்களும், நீர் நிலைகளும் காப்பாற்றப்படும். இந்த விவகாரத்தில் தமிழ்நாடு முதல்வர் உரிய தீர்வு காண விரைந்து முன்வர வேண்டும்.

**- ராமதாஸ்**



மராட்டியத்தில் நடந்ததை போன்று, பீகாரிலும் வாக்குத் திருட்டுக்கு முயற்சி செய்கிறார்கள். ஆனால், பீகார் மக்கள் இதை நடக்க விடமாட்டார்கள் என்று. தேர்தல் ஆணையம் அரசியலமைப்பை பாதுகாக்க வேண்டும். ஆனால், பா.ஜ.க. அறிவுறுத்தல்படி செயல்படுகிறது.

**- ராகுல் காந்தி**

### அலங்காநல்லூர் அருகே

# அ.தி.மு.க. சார்பில் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அன்னதானம்

### ஆர்.பி உதயகுமார் எம்.எல்.ஏ. பங்கேற்பு



**வாடிப்பட்டி, ஜூலை 10-**

மதுரை புறநகர் மேற்கு மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றிய அதிமுக சார்பில் முடுவார் பட்டியில் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது

நிகழ்ச்சிக்கு அலங்காநல்லூர் ஒன்றிய செயலாளர் கல்லணை ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார் முன்னாள் அமைச்சர் ஆர் பி உதயகுமார் எம்எல்ஏ கலந்து கொண்டு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அன்னதானம் வழங்கி சிறப்புரையாற்றினார்

முன்னாள் எம்எல்ஏக்கள் எம் வி கருப்பையா மாணிக்கம் அலங்காநல்லூர் பேரூர் செயலாளர் அழகுராஜா வாடிப்பட்டி யூனியன் முன்னாள் சேர்மன் ராஜேஷ் கண்ணா வாடிப்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் கொரியர் கணேசன், மதுரை மேற்கு தெற்கு ஒன்றிய செயலாளர் அரியூர் ராதாகிருஷ்ணன் முடுவார்பட்டி மாணிக்கம். விருகை தருமர் மாவட்ட விவசாய அணி இணைச் செயலாளர் வாவிட மருதூர் ஆர்பி குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற இணைச்செயலாளர் முடுவார்பட்டி ஜெயச்சந்திரன் மணியன், கல்லணைமுமனோகரன்.முடுவார் பட்டி கேகே காமாட்சி.மகளிர் அணி லட்சுமி, உமா ஸ்ரீ மாரி ரேவதி கிளைக் கழக நிர்வாகிகள் மகளிர் அணியினர் உள்பட பலர் கலந்து கொண்டனர்

### கலைஞர் கனவு இல்லம் திட்டம் மூலம்

# சிமெண்ட் மூட்டைகள் வாங்கும் பயனாளிகளிடம் தொலைபேசியில் மாவட்ட கலெக்டர் கேட்டறிந்தார்



**விருதுநகர், ஜூலை 10-**

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா நேரில் சென்று ஆய்வு செய்தார்.

அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பெரிய வள்ளிக்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில்; முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து, மாவட்ட கலெக்டர் பார்வையிட்டு, அங்கு மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும், தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு ஸ்மார்ட் வகுப்பறை மூலம் கற்றல், கற்பித்தல் நடைபெற்று வருவதையும், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் ஆமணக்குநத்தம் கிராமத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெறவுள்ள இடத்தினை பார்வையிட்டு, முன்னேற்பாடுகள் பணிகள் குறித்தும், அப்பகுதிகளில் வீடு வீடாக கோரிக்கை விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருவதையும் மாவட்ட கலெக்டர் ஆய்வு செய்தார்.பின்னர், பெரியநாயகிபுரம் ஊராட்சியில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், ரூ.31.85 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள தார் சாலை பணிகளின் தரம் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார்.


தொடர்ந்து, அருப்புக்கோட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாவட்ட கலெக்டர் பார்வையிட்டு, நடப்பு கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கை, புதுமை பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவர்கள் உள்ளிட்டவை குறித்து கேட்டறிந்து ஆய்வு செய்து, மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்ட பயனாளிகளுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்டுள்ள சிமெண்ட் சேகரிப்பு கிடங்கினை பார்வையிட்டு ஆய்வு செய்து, சிமெண்ட் மூட்டைகளின் இருப்பு குறித்தும், பயன்பெற்றோரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டும், சிமெண்ட் மூடைகள் பெற வருகை தந்த புதிய பணி நியமன ஆணை பெற்ற பயனாளிகளிடமும் விபரங்களை கேட்டறிந்து, உரிய பயனாளிகளிடம் சென்றடைகிறதா என்பது குறித்து மாவட்ட கலெக்டர் உறுதி செய்தார். இந்த ஆய்வின் போது வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் இருந்தனர்

# மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் ஒரு தனித்துவமான ஆடி 2025-கான சலுகைகளை அறிவித்துள்ளது

**சென்னை, ஜூலை 10-**

உலகளவில் மிகப்பெரிய மற்றும் மிகவும் நம்பகமான நகை சில்லறை விற்பனை நிறுவனங்களில் ஒன்றான பொறுப்புள்ள ஜூவல்லரியான மலபார் கோல்டு & டைமண்ட்ஸ், ஆடி மாதத்தை முன்னிட்டு தனித்துவமான பண்டிகை சலுகைகளை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.ஆடித் தள்ளுபடியின் ஒரு அங்கமாக, வாடிக்கையாளர்கள் வாங்கும் தங்கம், அன்கட், மற்றும் ஜெம்ஸ்டோன் நகைகளுக்கு சேதாரத்தின் மீது பிளாட் 30% சலுகையைப் பெறலாம். மேலும், வைரத்தின் மதிப்பில் 30% வரை தள்ளுபடியையும் பிராண்டு அறிவித்துள்ளது. இந்த சலுகைகள் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வரும் ஆகஸ்ட் 10, 2025 வரை செல்லுபடியாகும்.மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் அதன் மலபார் வாக்குறுதிகள் மூலம் நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகிய முக்கிய மதிப்பீடுகளை தொடர்ந்து நிலைநாட்டுகிறது. முழு நம்பகத்தன்மையையும் அதன் கொள்முதல் தொடங்கி இறுதி நகை விற்பனை வரை அதன் பயணத்தை உறுதி செய்கிற விதத்தில் ஒவ்வொரு நகையும் 100% எச்யூஐடி இணக்கமானது. மலபார் வாடிக்கையாளர் அனுபவத்தின் ஒரு நிலையான பகுதியின் வெளிப்படையான விலை நிர்ணயமும், விரிவான விலை விவரங்களும் உள்ளன.




இந்தியா, மத்திய கிழக்கு, தூர கிழக்கு, அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட 13 நாடுகளில் 400-க்கும் மேற்பட்ட ஷோரூம்களைக் கொண்ட மலபார் கோல்டு & டைமண்ட்ஸ், 15 மில்லியனுக்கும் அதிகமான திருப்திகரமான வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்துள்ளது. 25,000-க்கும் மேற்பட்ட பல மொழிபேசும் நிபுணர்களைக் கொண்ட அதன் உலகளாவிய குழு, அனைத்து இடங்களிலும் தடையற்ற மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட ஷாப்பிங் அனுபவத்தை உறுதி செய்கிறது.பொறுப்பான வணிக நடைமுறைகளுக்கான அதன் உறுதிப்பாட்டிற்கு இணங்க அனைத்து தங்கம் மற்றும் வைரங்களும் சான்றளிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வழிகள் மூலம் அறநெறிப்படி பெறப்படுவதை மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் உறுதி செய்கிறது. ஒவ்வொரு தயாரிப்பும் கைவினைத்திறன் மற்றும் ஒருமைப்பாட்டின் மிக உயர்ந்த தரங்களைப் பூர்த்தி செய்வதை கடுமையான தரக் கட்டுப்பாடுகளும் சர்வதேச சான்றிதழ்களும் உறுதி செய்கின்றன. மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் பெறு நிறுவன சமூகப் பொறுப்புணர்வின் மீது ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது. தனது வணிக நெறிமுறைகளின் மையமாக நீடித்த நிலைத்தன்மையை ஒருங்கிணைக்கும் விதத்தில் கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி, நீடித்த சுற்றுச்சூழல், பசி ஒழிப்பு மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் முயற்சிகளுக்கு இந்த பிராண்டு தனது லாபத்தில் 5%-ஐ ஒதுக்குகிறது.

# பரமக்குடி அரிமா சங்க புதிய நிர்வாகிகள் பதவி ஏற்றனர்




**பரமக்குடி, ஜூலை 10-**

பரமக்குடி அரிமா சங்க புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா லயன்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடந்தது. விழாவிற்கு அரிமா முன்னாள் பன்னாட்டு இயக்குநர் முத்துராஜ் நாகராஜன் தலைமை தாங்கினார்.மாவட்ட அரிமா கவர்னர் பொறியாளர் வி. ஜெகநாதன்,அரிமா சங்க தலைவர் ஆர்.எம்.இளங்குமரன், செயலாளர் எஸ்.வி.சுப்பையா, பொருளாளர் பி.தியாகராஜன் மற்றும் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.ஆர். ரெங்கராஜன் அனைவரையும் வரவேற்றார்.புதிய நிர்வாகிகளான தலைவர் எஸ். சரவணன், செயலாளர் ஆர்.ரெங்கராஜன், பொருளாளர் என். சுப்பிரமணியன் ஆகியோருக்கு முன்னாள் பன்னாட்டு இயக்குநர் முத்துராஜ் நாகராஜன் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

விழாவில் 10,11,12-ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது .உயர் கல்விக்கு செல்லும் மாணவிக்கு கல்வி உதவி நிதி மற்றும் நலிந்தோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டது. நிர்வாகிகள் முகம்மது உமர், ஏ.ராமமூர்த்தி, டாக்டர் வரதராஜன்,வி.எஸ்.என். கேசவன், மணிமாறன் மற்றும் நிர்வாகிகள்,பிரமுகர்கள் கலந்து கொண்டனர். தலைவர் எஸ்.சரவணன் ஏற்புரை வழங்கினார்.பொருளாளர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# மீஷோ மாலுடன் இணைந்து டாடா கன்சூமர் மற்றும் கேன்வ்யூ - எப்எம்சிஜி பிராண்டுகள் இந்தியா முழுவதும் விரிவுபடுத்துகிறது

**சென்னை, ஜூலை 10-**

நலவாழ்வு, பானங்கள் மற்றும் தனிநபர் பராமரிப்பு தயாரிப்புகளை இந்தியா முழுவதும் நுகர்வோருக்கு எளிதாகக் கொண்டு சேர்க்கும் நோக்கத்தில், டாடா கன்சூமர் பிரொடக்ட்ஸ் மற்றும் கேன்வ்யூ இந்தியா, மீஷோ மாலுடன் கூட்டணியில் சேர்ந்துள்ளன.இந்த ஒத்துழைப்பின் மூலம், டாடா டீ, டெட்லி, டாடா காபி, கிளீன் & கிளியர் முகக் கழுவும் திரவம், ஜான்சன்ஸ் பேபி தயாரிப்புகள் மற்றும் ஸ்டெய்ஃப்ரீ செக்யூர் சானிடரி பேட்ஸ் போன்ற பிரபலமான தயாரிப்புகள் மீஷோவின் கோடிக்கணக்கான வாடிக்கையாளர்களுக்கு குறிப்பாக 2ம் நிலை நகரங்கள் மற்றும் அதற்கும் மேற்பட்ட பகுதிகளில் நேரடியாகக் கிடைக்கின்றன.

டேராடூன், புரி, மதுரை மற்றும் சூரத் போன்ற நகரங்களில், கிரீன் டீ, சரும பராமரிப்பு மற்றும் நலவாழ்வு பொருட்கள் மீது ஆன்லைன் நுகர்வோரின் ஆர்வம் அதிகரித்துள்ளது. மீஷோ மால் இந்த பிரிவுகளில் துவக்கத்திலேயே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த கூட்டணியின் மூலம், டாடா மற்றும் கேன்வ்யூ இந்தியா தங்கள் தயாரிப்புகளை டிஜிட்டல்-முன்னேற்றம் கொண்ட நுகர்வோரிடம் கொண்டு சேர்க்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளன. மீஷோவின் வலுவான தாக்கம் மூலம், அவர்கள் தங்கள் வர்த்தகப் பரப்பையும் முக்கியத்துவத்தையும் இந்தியாவின் வளர்ச்சியடையும் சந்தைகளில் விரிவாக்குகின்றனர்.

# விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை வளாகம் வழங்கும் ஸ்கூல் ஸ்போர்ட்ஸ் ஸ்டார்ஸ் -2025

**சென்னை, ஜூலை 10-**

விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை வளாகம், பெருமையுடன் வழங்கும் ஸ்கூல் ஸ்போர்ட்ஸ் ஸ்டார்ஸ் -2025 பள்ளிகள் இடையிலான விளையாட்டு போட்டி ஜூலை 9 மற்றும் 10 தேதிகளில் நடைபெற உள்ளது. இப்போட்டியில் பங்கேற்கும் மாணவர்களின் திறமை மற்றும் விளையாட்டு ஆவியை பின்வரும் பிரிவுகளில் காணலாம்.கால்பந்து (ஆண்கள்) கைபந்து(ஆண்கள் மற்றும் பெண்கள்) எறிபந்து (பெண்கள்)இந்த மாபெரும் விளையாட்டு விழாவில் 100-க்கும் மேற்பட்ட பள்ளிகள் பங்கேற்க ஒப்புதல் அளித்துள்ளன. ஒவ்வொரு விளையாட்டு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளுக்கு பண பரிசுகள், கோப்பைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த சிறப்பு நிகழ்வு,வேந்தர் டாக்டர் ஏ.எஸ்.கணேசன் ஆசீர்வாதத்துடன் மற்றும் ஊக்கத்துடன் நடைபெற உள்ளது. விழாவை விளையாட்டு துறையின் முக்கிய நபர்கள் திறந்து வைக்கவுள்ளனர். எம்.அழகேசன் ஐஆர்எஸ்(ஓய்வு)உதவி கஸ்டம்ஸ் ஆணையர் (ஓய்வு)துணைத்தலைவர் தமிழ் நாடு மாநில வாலிபால் சங்கம்தலைவர்.செங்கல்பட்டு மாவட்ட வாலிபால் சங்கம் ஏ. மகேந்திரன்,முன்னாள் இந்திய வாலிபால் வீரர்இணைச் செயலாளர்,தமிழ்நாடு மாநில வாலிபால் சங்கம்செயலாளர் செங்கல்பட்டு மாவட்ட வாலிபால் சங்கம் ஆகும்.

# நகைச்சுவை திரைப்படமான மிஸ்டர் ராணி ஜூலை 11 அன்று லயன்ஸ்கேட் பிளேயில் வெளியாகிறது

**சென்னை, ஜூலை 10-**

தீபக் சுப்ரமண்யா அசத்தலான நடிப்பில் ஒரு மனிதனின் அடையாளம் மற்றும் கனவுகள் பற்றி பேசும் நகைச்சுவை திரைப்படமான மிஸ்டர் ராணி ஜூலை 11 அன்று லயன்ஸ் கேட் பிளேயில் வெளியாகவுள்ளது.ஒரு மனிதனின் தற்செயலான நட்சத்திர அந்தஸ்து அவனை புகழ்ச்சி, மாறுவேடம் மற்றும் உண்மையான சுயத்தை நோக்கிய தேடலை நோக்கி அவனை தள்ளுகிறது. அவனது பரபரப்பான பயணமே இந்த ஜனரஞ்சகமான நகைச்சுவை திரைப்படத்தில் கதைக் களமாகும்.திருப்பங்கள் நிறைந்த நகைச்சுவை காட்சிகள் நிறைந்த இக்கதையில், நடிப்பு பற்றும் கலை உலகில் தனக்கான அடையாளம், பாலினம் மற்றும் லட்சியத்தை தேடும் ஒரு பாலின-குழப்படி தான் மிஸ்டர் ராணி திரைப்படத்தின் மையக்கருவாகும். ஒரு புதிய அவதாரத்தை ஏற்று தீபக் சுப்ரமண்யா ராஜா கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

மது சந்திரா இயக்கியுள்ள மிஸ்டர் ராணி திரைப்படத்தினை வயிறு வலிக்க சிரிக்கும் தருணங்கள், ஒரு முக்கியமான சஸ்பென்ஸ், மற்றும் ஆழமான உணர்வுகள் என அனைத்தையும் சரியாக கலந்து உருவாக்கியுள்ளார். மேம்போக்கான ஒரு வாழ்க்கையின் உள்ளே கனவுகளை தேடுவது, சுய அடையாளத்தை கண்டறிவது மற்றும் நாம் நாமாக இருப்பதற்கான தைரியத்தைக் கண்டுபிடிப்பது என்பது பற்றியெல்லாம் பேசும் இந்த இதயப்பூர்வமான கதை - கதாநாயகனின் வாழ்வில் நடந்தால் கூட நமக்கு உத்வேகம் தருவதாக இருக்கும். தமிழ், கன்னடம், தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் வெளியாகும்.



**விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் வட்டம், அய்யனார் கோவில் மலை அடிவாரத்தில் வசிக்கும் மலைவாழ் பழங்குடியின மக்களை மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா, சந்தித்து கலந்துரையாடி கோரிக்கைகளை கேட்டறிந்து குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கினார்.**

### சிவரக்கோட்டையில்

# மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் நலத்திட்ட உதவிகள்

### மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழங்கினர்



**திருமங்கலம்,ஜூலை 10-**

முன்னாள் முதலமைச்சர் கலைஞரின் 102-வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஏற்பாட்டின் பேரில் திருமங்கலம் தொகுதியில் வசித்திடும் ஒன்றரை லட்சம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி வடக்கு ஒன்றியம் சிவரக்கோட்டை கிராமத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் விழாவிற்கு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமை வகித்தார். கள்ளிக்குடி வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ராமமூர்த்தி, தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் மதன்குமார் ஆகியோர் முன்னிலை வகித்து வரவேற்று பேசினர்.ஏராளமானோர் கலந்து கொண்ட இவ்விழாவில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் கலந்து கொண்டு தலைமையேற்று 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

அப்போது மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பேசுகையில்: தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் நல்லாட்சிக்கு நீங்கள் ஆதரவு தர வேண்டும். கடந்த தேர்தலில் கொடுத்த வாக்குறுதி அனைத்தையும் கடந்த 4 ஆண்டுகள் முழுமையாக முதல்வர் நிறைவேற்றி உள்ளார். வரும் 15ம் தேதி முதல் விடுபட்ட அனைத்து மகளிருக்கும் உரிமைத் தொகை திட்டம் கிடைக்கும். திமுக சாதனைகளை சொல்ல 100 நாள் ஆகும். அதிமுக - பாஜக கூட்டணி 100 நாள் வேலையை முடக்க திட்டமிட்டடுள்ளனர். மக்கள் நலத்திட்டங்களுடன் நல்லாட்சி தொடர்ந்திட 2026 சட்டமன்ற தேர்தலில் திமுகவுக்கு ஆதரவளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் இரண்டாவது முறை முதல்வராகிட ஆதரவு தாருங்கள் என்று பேசினார்.

இதனை தொடர்ந்து சிவரக்கோட்டை பகுதி மக்களுக்கு சிக்கன் பிரியாணியுடன் கூடிய அறுசுவை அசைவ உணவு விருந்தினை மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் துவக்கி வைத்து உணவு பரிமாறியதுடன் 20க்கும் மேற்பட்ட கிராம கிரிக்கெட் குழுக்களுக்கு கிரிக்கெட் மட்டை மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

இவ்விழாவில் பொதுக்குழு உறுப்பினர் ஆதிமூலம், செயற்குழு உறுப்பினர் முத்துராமன், ஒன்றிய செயலாளர்கள் பாண்டியன், தனசேகரன், நகர்மன்ற தலைவர் ரம்யா முத்துக் குமார், திருமங்கலம் நகர் மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், துணை தலைவர் ஆதவன் அதியமான்,பேரூர் செயலாளர் வருசை முகமது, மாவட்ட அணி அமைப்பாளர்கள் விமல், செல்வேந்திரன்,சிவனேசன், பரமசிவம், பாண்டி முருகன், மற்றும் கட்சி நிர்வாகிகள் வழக்கறிஞர்கள் கவிஸ்ரீதினேஷ்,அழகுமலை, வடக்கம்பட்டி ராதாகிருஷ்ணன், சுரேஷ், கருவேலம்பட்டி வெற்றி, காளிதாஸ், முத்துகுரு,நாகேந்திரன், சரவணன் மற்றும் கள்ளிக்குடி தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மேலூரில் மத்திய அரசை கண்டித்து சி.ஐ.டி.யூ. தொழிற் சங்கத்தினர் வேலை நிறுத்த போராட்டம்



**மேலூர், ஜூலை 10-**

மேலூரில் மத்திய அரசை கண்டித்து தொழிலாளர், விவசாயிகள், மக்கள் விரோத கொள்கைகளை கண்டித்து அனைத்து தொழிற்சங்கத்தின் சார்பில் அகில இந்திய பொது வேலை நிறுத்தம் நேற்று இந்திய அளவில் நடைபெற்றது.

மேலூரில் தலைமை தபால் நிலையம் முன்பு மறியல் போராட்டம் சிஐடியூ புறநகர் மாவட்ட தலைவர்கள் ஆஞ்சி, கண்ணன் ஆகியோர் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில் தொழிலாளர் விரோத 4 சட்ட தொகுப்புகளை திரும்ப பெற வலியுறுத்தியும், அனைத்து தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியமாக மாதம் ரூபாய் 26,000 நிர்ணயம் செய்திடவும், பழைய பென்சன் திட்டத்தை அமுல்படுத்திடவும், 100 நாள் வேலைக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்திடவும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்திடவும், மத்திய, மாநில அரசுகளே காண்ட்ராக்ட் முறையை ரத்து செய்திடவும், விவசாயிகள் விளைபொருட் களுக்கு கட்டுப்படியான விலையை நிர்ணயம் செய்திடவும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சி.ஐ.டி.யூ. தாலுகா நிர்வாகிகள் செயலாளர் சேகர், தாலுகா தலைவர் எஸ்.பி. மணவாளன், தாலுகா பொருளாளர் பிரசாத்,மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்ட குழு உறுப்பினர் எம். கண்ணன், மாவட்ட பொருளாளர் இராஜாமணி, கரும்பு விவசாய சங்க மாநில துணைத்தலைவர் பழனிச்சாமி, விவசாய சங்க செயலாளர் ராஜேஸ்வரன், விவசாய சங்க தலைவர் அடக்கி வீரன், கரும்பு விவசாய சங்க மாவட்ட தலைவர் கதிரேசன், உள்ளாட்சி சங்க மாவட்ட குழு உறுப்பினர் பரமசிவம், ஆகியோர் கலந்து கொண்டனர்.

போலீசார் இவர்களை கைது செய்து, தனியார் மண்டபத்தில் தங்க வைத்து பின்பும் அனைவரையும் விடுவித்தனர்.



ஹிந்துஸ்தான் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி அண்ட் சயின்ஸ், தனது கல்வி வளாகத்தில் 21-வது நூற்றாண்டுக்கான ஸ்டுடியோவை தொடங்கியிருப்பதன் வழியாக சிறப்பு பெருமை நிகழ்வை நடத்தியது. இந்நிகழ்வில் இந்தியாவுக்கான ருமேனிய தூதர் மேதகு சேனா லத்தீஃப், தமிழ்நாடு மற்றும் கேரளாவிற்கான ருமேனியாவின் கவுரவ துணை தூதர் டாக்டர் விஜய் மேத்தா மற்றும் திரைப்பட இயக்குநரும், சமூக சேவகருமான டாக்டர் சஞ்சனா ஜான் ஆகியோருடன் ஹிந்துஸ்தான் தொழில்நுட்ப மற்றும் அறிவியல் கல்வி நிறுவனத்தின் இணை வேந்தர் டாக்டர். அசோக் ஜார்ஜ் வர்கீஸ், அதன் துணை இயக்குனர் எனிட் வர்கீஸ் ஜேக்கப் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் வெப்பநிலை 3 நாட்களுக்கு உயர வாய்ப்பு

## வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, ஜூலை 10-**

தமிழகத்தில் அடுத்த 3 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்று இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்தில் வீசக்கூடும். 11 முதல் 15-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் அடுத்த 3 நாட்களுக்கு ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்றும், நாளையும் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் இன்று முதல் 13-ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 65 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலக மக்கள்தொகை தினத்தையொட்டி மேலூரில் விழிப்புணர்வு ஊர்வலம்




**மேலூர், ஜூலை 10-**

மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் உலக மக்கள் தொகை தினத்தையொட்டி மேலூரில் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. மேலூர் அரசு மருத்துவமனையின் தலைமை மருத்து அலுவலர் ஜெயந்தி வரவேற்றார்.

மதுரை நலப்பணிகள் இணை இயக்குனர் மரு.இரா. செல்வராஜ் தலைமை தாங்கி, நடைபயண பேரணியை தொடங்கி வைத்தார். மதுரை மருத்துவம் மற்றும் குடும்ப நலம் துணை இயக்குனர் மரு. எஸ். நடராஜன் முன்னிலை வகித்தார். மதுரை மாவட்ட திட்ட அலுவலர் பி. ஜெயபாண்டி, மதுரை பேஸ் அறக்கட்டளை இயக்குனர் பி. பொன் மனோகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

நடைபயணம் பேரணியில் மாணவ மாணவிகள் அழகர் கோவில் டாக்ஸி ஸ்டாண்ட் வழியாக பேருந்து நிலையம் சென்று பேங்க் ரோடு வழியாக மேலூர் அரசு மருத்துவமனைக்கு வந்தடைந்தனர். விழாவில் கிரஸண்ட் செவிலியர் பயிற்சி பள்ளி மாணவிகள் கலை நிகழ்ச்சி மற்றும் கட்டுரை ஓவியப்போட்டி பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ப்ரோசிகா தொண்டு நிறுவனத்திலிருந்து திருநங்கைகள் கலந்து கொண்டனர். மருத்துவர் கலாமணி முரளி பால் கண்ணன் நன்றி கூறினார்.

# கடலூர் ரயில் விபத்து: கேட் கீப்பர் உள்ளிட்ட 13 பேர் விசாரணைக்கு நேரில் ஆஜராக சம்மன்

**கடலூர், ஜூலை 10-**

கேட் கீப்பர் பங்கஜ் சர்மா, பள்ளி வேன் டிரைவர் சங்கர் உட்பட 13 பேருக்கு ரயில்வே விசாரணைக் குழு சம்மன் அனுப்பி உள்ளது.

கடலூர் அருகே தனியார் சி.பி.எஸ்.இ. பள்ளிக்கு சொந்தமான வேன் ஒன்று கடலூர் அருகே உள்ள தொண்டமாநத்தம், சின்ன காட்டு சாகை ஆகிய கிராம பகுதிகளுக்கு மாணவர்களை ஏற்றி வர சென்றது. அந்த பள்ளி வேனை கடலூர் மஞ்சக்குப்பத்தை சேர்ந்த சின்னையைன் மகன் சங்கர் (வயது 47) என்பவர் ஓட்டினார். பள்ளி வேன் அங்கிருந்த ரயில்வே கேட்டை கடக்கும் போது ரயில் மோதியதில் 3 மாணவர்கள் பலியாயினர்.

தமிழகத்தில் அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்த சம்பவத்தில் விபத்து தொடர்பாக, கேட் கீப்பர் பங்கஜ் சர்மா, பள்ளி வேன் டிரைவர் சங்கர் உட்பட 13 பேருக்கு ரயில்வே விசாரணைக் குழு சம்மன் அனுப்பி உள்ளது. இதன்படி இந்த விபத்தில் கவனக்குறைவாக செயல்பட்டதாகக் கூறி, செம்மங்குப்பம் கேட் கீப்பர் பங்கஜ் சர்மா, தனியார் பள்ளி டிரைவர் சங்கர், லோகோ பைலட் சக்தி குமார், உதவி லோகோ பைலட் ரஞ்சித் குமார், ரயில் நிலைய அதிகாரிகள் விக்ராந்த் சிங், அஜித் குமார், விமல், அங்கித் குமார், ஆனந்த், வடிவேலன், வாசுதேவ பிரசாத், சிவகுமரன் உள்பட 13 பேருக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் திருச்சி கோட்ட ரயில்வே பாதுகாப்பு அலுவலகத்தில் ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் அவர்களிடம் விபத்துக்கான காரணம் குறித்து அறியவும் ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

# நடிகை அனன்யா பாண்டே நடித்துள்ள கே-பாம்ப் நூடுல்ஸ் விளம்பரம்: டூ யம் அறிமுகம்

**சென்னை, ஜூலை 10-**

கடந்த ஆண்டு கே-பாம்ப் என்னும் பெயரில் புதிய உடனடி நூடுல்ஸை டூ யம் நிறுவனம் அறிமுகம் செய்தது. இது அறிமுகம் செய்யப்பட்ட குறுகிய காலத்திலேயே கொரிய நூடுல்ஸ் பிரியர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. பிரீமியம் நூடுல்ஸ் பிரிவில் தனக்கான ஒரு இடத்தை பிடிக்க இந்த பிராண்ட், அதை மேலும் வலுப்படுத்தும் விதமாக இளைஞர்களை மிகவும் கவர்ந்த நடிகை அனன்யா பாண்டேவை தங்கள் பிராண்டின் விளம்பர தூதராக நியமித்துள்ளது. மேலும் அவர் நடித்துள்ள புதிய 'க்யூஆர் குறியீடு' விளம்பர பிரச்சாரத்தையும் அறிமுகம் செய்துள்ளது. இது குறித்து டூ யம் நிறுவனத்தின் தலைமை மார்க்கெட்டிங் அதிகாரி யோகேஷ் திவாரி கூறுகையில், "அனன்யாவின் இளமையும் அற்புதமான நடிப்பும் அனைவரையும் வெகுவாக கவர்ந்துள்ளது. அதேபோல எங்களின் சுவைமிகுந்த கே-பாம்ப் நூடுல்சும் அனைவரும் விரும்பும் ஒன்றாக மாறியுள்ளது. மேலும் எங்கள் பிராண்டை அனைவரிடமும் கொண்டு செல்லும் விதமாக அவரை எங்கள் பிராண்டின் விளம்பர தூதராக நியமித்துள்ளோம். அதே நேரத்தில், எங்களின் பிரபலமான கே-பாம்ப் வகைகளுடன், ஏற்கனவே பிரபலமான ஹாட் என் ஸ்பைசி மற்றும் டாம் யம் போன்ற சுவைகளுடன், கிம்ச்சி, கொரிய சிக்கன் மற்றும் சிச்சுவான் மிளகு சோளம் ஆகிய 3 அற்புதமான புதிய சுவைகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு புதுமையான கப் நூடுல்ஸ் பேக்கையும் நாங்கள் அறிமுகப்படுத்தி உள்ளோம். இது உங்கள் பயணத்தின்போது எந்தவித சிரமும் இல்லாமல் எளிமையாக அதேசமயம் சுவையாக சாப்பிடும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். தற்போது 'ஸ்லர்ப் அண்ட் ஸ்பில்' என்ற தலைப்பில் பாட்காஸ்ட் நுட்பத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த விளம்பரத்தை 'க்யூஆர் குறியீட்டை' ஸ்கேன் செய்வதன் மூலம் வாடிக்கையாளர்கள் பார்க்கலாம். இதில் அனன்யா தனக்கு பிடித்தமான சாஸ், சுவையான சிற்றுண்டி ஆகியவை குறித்து விவரிக்கிறார். அதில் கே-பாம்ப் நூடுல்ஸ் இந்திய இளைஞர்களுக்கு எப்படி சிறந்த சிற்றுண்டியாகவும் மீண்டும் மீண்டும் சாப்பிடத் தூண்டும் வகையிலும் உள்ளது என்பதையும் கூறினார். நவீன தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த விளம்பரம் இளம் தலைமுறையினரை வெகுவாக கவரும் வகையில் எடுக்கப்பட்டு உள்ளது. மும்பை, டெல்லி, பெங்களூரு மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் இந்த புதிய விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. நூடுல்ஸ் பேக்குகளில் உள்ள க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் இந்த விளம்பரத்தை பார்த்து ரசிக்கலாம். இது குறித்து யோகேஷ் திவாரி கூறுகையில், இன்றைய நுகர்வோர் வழக்கமான விளம்பரங்களை அதிகம் விரும்பிப் பார்ப்பதில்லை. அவர்களை பார்க்க தூண்டும் விதமாக எங்களின் இந்த விளம்பரம் நகைச்சுவை, பொழுதுபோக்கு அம்சங்களும் நவீன தொழில்நுட்பத்திலும் தயாரிக்கப்பட்டு உள்ளது. எங்களது முக்கிய குறிக்கோள் நுகர்வோர் எங்கள் விளம்பரத்தை பார்ப்பதோடு மட்டுமல்லாமல் எங்கள் தயாரிப்புகளை வாங்கி சுவைக்க வேண்டும் என்பதே ஆகும் என்று தெரிவித்தார். இந்த விளம்பரம் சமூக ஊடகங்களான இன்ஸ்டா, பேஸ்புக் மற்றும் டூ யம் நிறுவனத்தின் இணையதளத்திலும் வெளியிடப்பட்டு உள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# உத்தரவாதமான அதிக மைலேஜ் மற்றும் அதிக லாபத்தை வழங்கும் இலகுரக வணிக வாகன பிரிவில் மஹிந்திரா ஃபியூரியோ 8 அறிமுகம்

**மதுரை, ஜூலை 10-**

மஹிந்திரா குழுமத்தின் ஒரு பகுதியான மஹிந்திரா டிரக் அண்ட் பஸ் பிசினஸ் " அதிகபட்ச மைலேஜ் பெறுங்கள் அல்லது டிரக்கைத் திருப்பிக் கொடுங்கள்." எனும் தனித்துவமான உத்தரவாதத்துடன் ஆதரிக்கப்பட்ட ஒரு நவீன இலகுரக வணிக வாகன டிரக்குகளின் ஒரு அதிநவீன வரம்பான மஹிந்திரா ஃபியூரியோ 8-ன் வணிக ரீதியான அறிமுகத்தை அறிவித்துள்ளது. இலகுரக வணிக வாகன பிரிவில் உள்ள பல்வேறு வணிக பயன்பாடுகளுக்கு உதவுகின்ற வகையில், மகாராஷ்டிராவின் சாக்கன் இல் உள்ள மஹிந்திரா நிறுவனத்தின் உலகத் தரம் வாய்ந்த ஆலையில் தயாரிக்கப்பட்ட மஹிந்திரா ஃபியூரியோ 8, 4-டயர் கார்கோ மற்றும் 6-டயர் கார்கோ என இரண்டு வகைகளில் வருகிறது. அதிக லாபத்தை வழங்க வடிவமைக்கப்பட்ட ஃபியூரியோ 8, வகுப்பில் சிறந்த மைலேஜ், அதிக சுமை தாங்கும் திறன் மற்றும் உகந்த சௌகரியம், வசதி மற்றும் பாதுகாப்பிற்கான ஒரு அதிநவீன கேபினை வழங்குகிறது. அதன் தோற்கடிக்க முடியாத நன்மைகளின் தொகுப்பைக் கொண்டு, ஃபியூரியோ 8, அதன் பிரிவில் அதிக லாபத்தை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது. டிரக்ஸ், பஸ்சஸ் கன்ஸ்ட்ரக்ஷன் இக்விப்மென்ட், ஏரோஸ்பேஸ் & டிஃபென்ஸ் துறைத் தலைவரும் மஹிந்திரா குழுமத்தின் குழும நிர்வாக குழு உறுப்பினருமான வினோத் சஹாய் இந்த புதிய வரம்பு அறிமுக நிகழ்வு குறித்து பேசுகையில், "'அதிகபட்ச மைலேஜ் பெறுங்கள் அல்லது டிரக்கைத் திருப்பிக் கொடுங்கள்' என்ற உத்தரவாதத்துடன் கூடிய இந்த புதிய மஹிந்திரா ஃபியூரியோ 8 இலகுரக வணிக வாகன டிரக்குகளின் இந்த அறிமுகமானது, எங்கள் வாடிக்கையாளர்கள் இந்த வகையில் தங்கள் ஃபியூரியோ 8 இலிருந்து அதிகபட்ச இயக்க லாபத்தைப் பெற உதவும். இந்த புதிய டிரக் வரிசை, இந்தப் பிரிவின் மீதான எங்கள் தீவிர அர்ப்பணிப்பையும் எங்கள் தயாரிப்புகள் மீதான நம்பிக்கையையும் பிரதிபலிக்கின்ற அதே வேளையில் சிறந்த தரம் மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்தப்பட்ட அணுகுமுறை ஆகியவற்றின் புதிய தரநிலைகளை அமைக்கிறது." என்று கூறினார்.ஃபியூரியோ 8 பணிமனைகளில் 36 மணி உத்தரவாதமான பணிநிறுத்த நேரம் அல்லது கூடுதல் நாளுக்கு ரூ. 3000/-; 48 மணி நேரத்தில் மீண்டும் சாலைக்கு வரும் அல்லது கூடுதல் நாளுக்கு ரூ. 1000/- ஆகிய இரட்டை சேவை உத்தரவாதங்களுடன் ஃபியூரியோ 8 வருகிறது. மேலும், ஃபியூரியோ 8 இந்தியாவின் மிகவும் மேம்பட்ட டெலிமாடிக்ஸ் தொழில்நுட்பமான, இருப்பிட கண்காணிப்பு, ஜியோஃபென்சிங், வாகன தகவு கண்காணிப்பு, ஓட்டுநர் செயல்திறன் பகுப்பாய்வு, ஃப்ளீட் டேஷ்போர்டுகள் மற்றும் பலவற்றை வழங்குகிற மஹிந்திரா ஐமேக்ஸ் உடன் பொருத்தப்பட்டுள்ளது.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 / 94**

# ராமேசுவரத்தில் இந்து முண்ணனி அமைப்பினர் ஆர்ப்பாட்டம்

**ராமேசுவரம், ஜூலை.10-**

ராமநாதசாமி திருக்கோவிலில் உள்ளூர் பக்தர்களை வழக்கமான வழியில் தரிசனம் செய்ய அனுமதிக்க கோரி இந்து முன்னணி அமைப்பினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உலக புகழ்பெற்ற ராமேஸ்வரம் இராமநாதசுவாமி திருக்கோயிலில் தினசரி 20 ஆயிரத்து மேற்பட்ட வெளி மாநில பக்தர்கள் வெளி மாவட்ட பக்தர்கள் என சாமி தரிசனம் செய்ய வருகின்றனர். அது போல உள்ளூர் பக்தர்களும் சாமி தரிசனம் செய்வதற்கு செல்கின்றனர். இந்த நிலையில் பக்தர்கள் கூட்ட நெரிசல்களை தவிர்ப்பதற்கு திருக்கோவில் நிர்வாகம் சாமி தரிசனம் செய்வதற்கு பக்தர்களுக்கு தனி தனி கவுண்டர்களை ஏற்படுத்தியுள்ளது. அது போல உள்ளூர் பக்தர்கள் அதிகநேரம் காத்திருக்காமல் சாமி தரிசனம் செய்ந நேரடியாக செல்வதற்கு பல ஆண்டுகளாக ஒரு வழியில் பாதையை அனுமதித்திருந்தனர். இந்த நிலையில் சமீப காலமாக உள்ளூர் பக்தர்களை ரூ.200 கட்டணம் செலுத்தி வெளிப்பகுதி பக்தர்கள் செல்லும் வழியில் இலவசமாக சென்று தரிசனம் செய்ய கோவில் நிர்வாகம் முடிவு செய்து நடைமுறை செய்தது. இதனால் உள்ளூர் பக்தர்கள் அதிக நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்யும் சூழ்நிலை ஏற்பட்டது. இதனை கண்டித்து கோவில் நிர்வாகம் பழைய வழிமுறை வழிகளில் உள்ளூர் பக்தர்கள் சாமி தரிசனம் செய்வதற்கு அனுமதி வழங்க கோரி இராமேஸ்வரம் பேருந்து நிலையத்தில் இந்து முன்னணி சார்பில் ஆர்ப்பாட்டம் நேற்று புதன் கிழமை நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ராமேசுவரம், இந்து முன்னணி நகர் தலைவர் நம்புராஜன் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் இந்து முன்னணி மாவட்ட தலைவர் இராமமூர்த்தி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்து முன்னணி நிர்வாகிகள் கார்த்திக், மேகநாதன் நாராயணன், வீரசௌந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலையிலும் இந்து முன்னணி மாவட்ட செயலாளர் சக்திவேல் மாவட்ட செயற்குழு உறுப்பினர் திருவருட்செல்வன் மாவட்ட செயற்குழு உறுப்பினர் காலிஸ் மற்றும் பாரதிய ஜனதா கட்சி மாவட்ட செயலாளர்கள் மீரா பாஸ்கர்,ஜெயந்தி, பாரதிராஜன் ராமச்சந்திரன் உட்பட இந்து முன்னணி அமைப்பின் தொண்டர்களும் பின்னர் தொண்டர்களும் ஏராளமானவர் ஆகியோர்கள் கலந்து கொண்டு கோவில் நிர்வாகத்தை கண்டித்து கோஷமிட்டனர்.

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within 3 months there after I, YOGESHWARAN.S, S/O R.SATHEESH KUMAR, D.O.B. 26.02.2003, Aged 22 years, permanently residing at Door number 37, Ward 21, Bojraj Street, kulalarpalayam, Bodinayakanur, Bodinayakanur Taluk, Theni district, Tamilnadu 625513.intend having my enrollment as an advocate moved before the Bar Council of Tamilnadu & Puducherry, Bar Council Buildings, High Court campus, Chennai-104. Those who have any valid objections may, notify the same to the Bar Council within 10 days.

**YOGESHWARAN. S**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
திருச்சுழி
L.A. NO.2/2025
O.S.No.19/2025

1. ராமர்
2. முத்து

---மனுதார்கள் / வாதிகள்
-எதிர்-

1. சீனிநாயக்கர்
2. தங்கராஜ்
3. தமிழ்நாடு அரசு அதன் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம்
4. வட்டாட்சியர், திருச்சுழி வட்டம்
5. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் (கிராம ஊராட்சி நரிக்குடி)

--எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள்

(1, 2 பிரதிவாதிகள் தங்களுக்காகவும் திருச்சுழி தாலுகா, வலையபட்டி கிராம பொதுமக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்திலும்)

மேற்படி மனுதார்கள் / வாதிகள் மேற்படி வழக்கின் 1, 2 பிரதிவாதிகளை தங்களுக்காகவும் திருச்சுழி தாலுகா, வலையபட்டி கிராம பொதுமக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்திலும் இருந்து மேற்படி வழக்கை நடத்த அனுமதி கோரி மனுதாக்கல் செய்திருப்பதில் எவருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் மேற்படி நீதிமன்றத்தில் வருகிற 1-8-2025ம் தேதிய வாய்தாவில் காலை சுமார் 10 மணியளவில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறினால் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை நீதிமன்ற உத்தரவின் பேரில் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

N. சோலைராஜ் B.Com., B.L.
வழக்கறிஞர், அருப்புக்கோட்டை

திண்டுக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றம்
இ.ஏ.எண் 1/2024 இல்
இ.பி எண் 68/2021 இல்
ஓ.எஸ்.எண் 214/2018

திரு பாலசுப்ரமணியம்
S/o சண்முகம்
..... மனுதார்

1.திரு.ஸ்ரீநிவாசதயாநிதி
S/O ராஜரத்தினம்
D.No.4/89, கர்ணம் தெரு
ஆத்தூர், திண்டுக்கல்- 624701
2 திருமதி உமாராணி,
W/O. R.ஸ்ரீநிவாசதயாநிதி
D.No.4/89, கர்ணம் தெரு.
ஆத்தூர், திண்டுக்கல் - 624701
....... எதிர்மனுதார்

மேற்படி மனுதார் வாதி இ.பி நம்பர் 68/2021-ல் கண்ட சொத்து விபரத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை இம்மனுவில் திருத்தம் செய்துகொள்ள வேண்டி மனு செய்துள்ளத்தில் 31/07/2025 நாள் வாய்த ஏற்பட்டுள்ளதில் தங்களது ஆட்சேபணைகளை அன்று காலை 10.00 மணி அளவில் சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது அட்வகேட் மூலமோ ஆஜராகி தெரிவித்து கொள்ளவேண்டியது தவறும்பட்சத்தில் விஷயம் எக்ஸ் பார்ட்டியாக தீர்மானிக்கப்படும்.

வெ.ஆறுமுகம் B.A.B.L
செ.குமரேசன் M.B.A.LL.B
அட்வகேட்ஸ்,திண்டுக்கல்.

வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், இராமநாதபுரம்
பாகம்பிரியாள், க/பெ.பவுல்ராஜ்,
2/4,கீழச்சித்தூர்வாடி,
இராமநாதபுரம் வட்டம்-மாவட்டம்
.......... மனுதார்
எதிர்
வட்டாட்சியர் அவர்கள்,
பிறப்பு இறப்பு பதிவு அதிகாரி,
வட்டாட்சியர் அலுவலகம்,
இராமநாதபுரம்.
.......எதிர்மனுதார்

அறிவிப்பு

எனது மகன் P.வினோத்குமார் என்பவர் இராமநாதபுரம் வட்டம் - மாவட்டம், தேவிபட்டிணத்தில் உள்ள JMS Clinic-ல் வைத்து கடந்த 03.08.1999 அன்று பிறந்தான். அப்போது எங்களது அறியாமையின் காரணமாக எனது மகன் P.வினோத்குமார் பிறப்பை பதிவு செய்யாமல் விடுபட்டு போனது. எனவே, எனது மகன் P.வினோத்குமார் பிறப்பை எதிர்மனுதாரர் அலுவலக பிறப்பு இறப்பு பதிவேட்டில் பிறப்பை பதிவு செய்ய உத்தரவிடக்கோரி இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துகொள்ளலாம் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

பாகம்பிரியாள்,
மனுதாரர்.

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
இராமநாதபுரம்
ந.க.எண்.அ7/1996/2024
மன்சூர் அலி,
த/பெ.அப்துல் ஹமீது,
2/352, வடக்குத்தெரு,
பெரியபட்டிணம்,
கீழக்கரை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.
.... மனுதார்
-எதிர்-
வட்டாட்சியர்,
பிறப்பு இறப்பு பதிவாளர்,
கீழக்கரை.
..... எதிர்மனுதார்.

அறிவிப்பு

எனது பாட்டி அயின்சை உராவி என்பவர் கடந்த 15.12.1972 அன்று மேற்கண்ட முகவரியில் உள்ள வீட்டில் வைத்து இறந்துபோனார். எனது பாட்டி அயின்சை உராவி இறந்தபோது எங்களது அறியாமையின் காரணமாக அவரது இறப்பை மேற்கண்ட எதிர்மனுதாரர் பிறப்பு இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய விடுபட்டுபோனது. எனவே இறந்துபோன எனது பாட்டி அயின்சை உராவி இறப்பை எதிர்மனுதார் அலுவலக பிறப்பு இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்தரவிடக்கோரி இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மன்சூர்அலி,
மனுதாரர்.

**ஆவணம் காணவில்லை**

இதன் மூலம் சகலமானவர்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால், எனது கட்சிக்காரரான தேனி மாவட்டம், தேனி தாலுகா, சீலையம்பட்டி கிராமம், கதவு எண்.123 என்ற முகவரியில் வசித்து வரும் பரமசிவம் அவர்களின் குமாரர் திரு. முருகேசன் ஆகிய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில் சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட எனக்கு பாத்தியமான மூலக்கிரையபத்திரமான கிரைய ஆவண எண். 6728/2021 -நிர் ஆவணம் கடந்த 10:05.2025-ம் தேதி தேனி சீலையம்பட்டி பேருந்து நிலையம் அருகில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுத்து திரும்பும் போது தொலைந்துவிட்டது. இது சம்மந்தமாக கடந்த 13.05.2025-ம் தேதி சின்னமனூர் காவல்நிலையத்திற்கு இணையதளம் மூலம் புகார் செய்துள்ளேன். மேற்படி ஆவணத்தினை யாரேனும் எடுத்திருந்தால் 5 தினங்களுக்குள் தங்களது ஆட்சேபனைகளை தெரிவுக்குமாறும் அல்லது கண்டுப்பிடித்தாலோ, எனது கட்சிக்காரருக்கோ அல்லது கீழ்கண்ட எங்கள் அலுவலக முகவரிக்கோ, தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

P. மாதவன், B.A., L.L.B., வழக்கறிஞர்.
ஸ்ரீ சாய் ராம் லா அசோசியேட்ஸ், No.1287, K.N.V.காம்பளக்ஸ், என்வியூ கம் பேங்க் முதல் தளம், பெரியகுளம் ரோடு, தேனி. செல்: 9842181602.

**ENROLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months thereafter. I, KAVYA B D/o. T. Balakrishnan aged 25 years Permanently Residing at No.3/187-11, K.Athikombai, Kalanjipatti Post, Oddanchatram Taluk, Dindigul District, Tamil Nadu Pin : 624619. Intend having my enrolment as an advocate moved before the bar council of Tamilnadu & Puducherry, High Court Building, High Court Campus, Chennai-104. Those who have any valid objections may, notify the same to the Bar Council within 10 days.

**KAVYA B**

**பொது அறிவிப்பு**

எமது கட்சிக்காரரான திண்டுக்கல், சென்னமநாயக்கன்பட்டி, அய்யப்பன் கோவில் அருகில், ஸ்ரீதிருப்பதி பாலாஜி நகர், பிளாட் எண். 29ல் வசிக்கும் ரத்தினவேல் மகன் R. மருதப்பன் அவர்கள் கடந்த 09.07.2025ம் தேதி தனது பெயரில் உள்ள 2513/2022 (சின்னாளபட்டி சார் பதிவகம் பதிவு நாள் 10.08.2022) என்ற அசல் கிரைய ஆவணத்தை ஒரு மஞ்சள் பையில் வைத்து சின்னாளபட்டி பேரூந்து நிலையம் அருகில் ஜெராக்ஸ் எடுக்க சென்ற போது மஞ்சள் பையுடன் தொலைந்து விட்டது. மேற்படி ஆவணத்தை கண்டு எடுப்பவர்கள் எம்மிடமோ அல்லது எமது கட்சிக்காரரிடமோ ஒப்படைக்க வேண்டி இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

SU.UDHAYA KUMAR B.A., B.L.,
Advocate, Dindigul.
Cell 98426 36522

கனம் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், அருப்புக்கோட்டை
வ.எண்.10-2-/390/2025/-A6
N. கண்ணன்,
த/பெ. நாராயணசாமி
1/512, மாரியம்மன் கோவில் தெரு
ஜெயராம் நகர், ஆத்திப்பட்டி
அருப்புக்கோட்டை வட்டம்
-----மனுதாரர்
-எதிர்-
1. வருவாய் வட்டாட்சியர் அவர்கள், அருப்புக்கோட்டை.
2. சார்பதிவாளர் அவர்கள், அருப்புக்கோட்டை.
-----எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாயார் மாரியம்மாள் என்பவர் கடந்த 15.05.2015ம் தேதி மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை எதிர் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்யக்கோரி கனம் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி இறப்பை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கிடைத்ததில் இருந்து 15 தினங்களுக்குள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை செய்து கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

V. ராஜா, MA.BL
அட்வகேட்,
அருப்புக்கோட்டை

தமிழ்நாடு அரசு
திற்பரப்பு தேர்வுநிலை பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்

ந.க.எண். 214/ 2025 / அ1 | மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | நாள்: 09.07.2025

கன்னியாகுமரி மாவட்டம், திற்பரப்பு தேர்வுநிலை பேரூராட்சி இயக்கம் மற்றும் பராமரிப்பு O&M 2025-2026 திட்டம் 2025-2026 ன் கீழ் ரூ.220.00 இலட்சம் மதிப்பீட்டில் தும்பகோடு கிராமம் றி சர்வே எண் 368/2 ல் பேருந்து நிலையம் மேம்பாடு செய்தல் பணி மேற்கொள்ள மறுஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 28.07.2025 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ-டெண்டரிங் முறையில் மறுஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது. வரப்பெற்ற மறுஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 4.00 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் செயல்அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் https://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் E-Token / Digital Signature Card உபயோகித்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். இதர விபரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்துகொள்ளலாம்.

செ.ம.தொ.இ /3547/ ஒப்பந்தப்புள்ளி / 2025

தலைவர், திற்பரப்பு தேர்வுநிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்.
செயல் அலுவலர், திற்பரப்பு தேர்வுநிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்.

தமிழ்நாடு அரசு
ஒடுகத்தூர் முதல் நிலை பேரூராட்சி, வேலூர் மாவட்டம்,

ந.க.எண். 129/ 2025 | ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | நாள்: 09.07.2025

வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் முதல்நிலை பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2025-2026- திட்டத்தின் கீழ் ரூ.291.00 இலட்சம் மதிப்பீட்டில் வாரச்சந்தை மேம்பாடு செய்தல் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 15.07.2025-ம் தேதி செவ்வாய் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை (அலுவலக கடிகாரப்படி) இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ-டெண்டரிங் முறையில் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 3.30 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் 15.07.2025-ம் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை https://tntenders.gov.in மற்றும் http://townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதளம் மூலம் E-Token /Digital Signature card உபயோகித்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். இதர விவரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.

செயல் அலுவலர், ஒடுகத்தூர் பேரூராட்சி, வேலூர் மாவட்டம்.

செ.ம.தொ.இ /3528/ ஒப்பந்தப்புள்ளி / 2025

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
ஒப்பந்தம்-C-FORM/ ITEM RATE (இணையதள வழியில் மட்டும்)

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்.18/2025–2026/க(க&ப)வ–1/சென்னை/நாள்: 08.07.2025

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களால் கீழ்க்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொள்ளப்படும்.

| வ.எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு லட்சங்களில் | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | ஒரு உறை முறை | | | |
| 1 | சென்னை–10, கீழ்ப்பாக்கம், IMH-இல் உள்ள தமிழ்நாடு மனநலம் மற்றும் நரம்பியல் நிறுவனத்திற்கான (TNIMHANS) சிறப்பு மையக் கட்டடத்திற்கு கூடுதல் மின் வசதிகளை செய்யும் பணி | ரூ. 125.00 இலட்சங்கள் | ரூ.73,000/- 4 (நான்கு) மாதங்கள் | பொதுப்பணித்துறையில் பதிவு பெற்றவகுப்பு–4 மற்றும் அதற்கு மேல் (திருத்தியவகுப்பின்படி) with ESB License holders |

குறிப்பு: 1. ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in. 2. பணித்தள ஆய்வு சான்று உரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள்: 21.07.2025. 3. இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் 24.07.2025 மாலை 3.00 மணி வரை. 4. பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் 24.07.2025 மாலை 4.00 மணி. 5. ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் http://tntenders.gov.in இணையதளத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்.

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5.

செ.ம.தொ.இ / 3504 / ஒப்பந்தப்புள்ளி / 2025

தமிழ்நாடு அரசு / பொதுப்பணித்துறை
கட்டட (க & ப) வட்டம் திருவாரூர் – 1.
ஒப்பந்த வகை : ஒட்டு மொத்தம் / இனவிலைமுறை

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 11/க (க & ப ) வட்டம்/திருவாரூர்/2025–26/ நாள்: 08.07.2025

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க & ப ) வட்டம், திருவாரூர்–1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து 1 பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. மயிலாடுதுறை மாவட்டத்தில் – 1 பணிக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விபரங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் : 14.07.2025 முதல் 28.07.2025 பிற்பகல் 3.00 மணி வரை.
3. ஒப்பந்தபுள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் : 28.07.2025 பிற்பகல் 3.00 மணி வரை.
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 29.07.2025 முற்பகல் 11.00 மணி முதல்.

கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,
கட்டட (க & ப) வட்டம், திருவாரூர் – 1.

செ.ம.தொ.இ/3501/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டட (க&பரா) வட்டம், மதுரை-625002
விலை விகித முறை

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.15க.பொ/க (க & ப) வட்டம், மதுரை / 2025–2026 / நாள்.08.07.2025.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (க & ப) வட்டம், மதுரை அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள மின் ஒப்பந்தகாரர்களிடமிருந்து 02 (இரண்டு) பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. இரண்டு மின் பணிகளுக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் 15.07.2025 முதல் 30.07.2025 மாலை 3.00 மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் : 30.07.2025 மாலை 3.00 மணி வரை.
4. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 30.07.2025 மாலை 3.30 மணி முதல்
5. ஒப்பந்ததாரர் பணித்தளத்தினை பார்வையிட சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 25.07.2025
6. மதுரை, மின்கோட்ட செயற்பொறியாளர்களிடமிருந்து பணித்தளத்தினை பார்வையிட்ட சான்றிதழ் பெறுவதற்கான கடைசி நாள் : 29.07.2025

கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,
கட்டட (க&பரா) வட்டம், மதுரை

செ.ம.தொ.இ/3494/ஒப்பந்தப்புள்ளி/2025

# இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் முன்னிலை பெறுமா இந்திய அணி?

## 3-வது டெஸ்ட் இன்று தொடக்கம்

**லண்டன், ஜூலை 10-**

இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் முன்னிலை பெறுமா இந்திய அணி என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது. 3-வது டெஸ்ட் இன்று தொடங்குகிறது.

**1-1 என்ற கணக்கில்...**

இங்கிலாந்துக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் முதலாவது டெஸ்டில் இங்கிலாந்தும், 2-வது டெஸ்டில் இந்தியாவும் வெற்றி பெற்றன. இதனால் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் இருக்கிறது. இந்தியா- இங்கிலாந்து மோதும் 3-வது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்சில் இந்திய நேரப்படி நாளை (வியாழக்கிழமை) மாலை 3.30 மணிக்கு தொடங்குகிறது. இதையொட்டி இந்திய வீரர்கள் நேற்று தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

**வேகப்பந்து வீச்சுக்கு...**

லார்ட்ஸ் ஆடுகளம் தொடக்கத்தில் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும். போக போக பேட்டிங்குக்கு ஒத்துழைக்கும். கடந்த இரு போட்டிகளில் பார்த்ததை விட லார்ட்ஸ் ஆடுகளத்தில் புற்கள் கொஞ்சம் அதிகமாக உள்ளது. முதல் இரு போட்டிகளுடன் ஒப்பிடும் போது இது சவாலான ஆடுகளமாக இருக்கும். சமீபத்தில் இங்கு நடந்த ஆஸ்திரேலியா- தென்ஆப்பிரிக்கா இடையிலான உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி ஆட்டத்தில் வேகப்பந்து வீச்சாளர்கள் மொத்தம் 31 விக்கெட்டுகளை வீழ்த்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.



**முகமது சிராஜ் ஓய்வு...**

இந்தியா- இங்கிலாந்து மோதும் 3-வது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்சில் இந்திய நேரப்படி இன்று மாலை 3.30 மணிக்கு தொடங்குகிறது. இந்த நிலையில், இன்றைய ஆட்டத்திற்கான இந்திய அணியில் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான முகமது சிராஜுக்கு ஓய்வு அளிக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. முகமது சிராஜ் முதல் 2 போட்டிகளிலும் தொடர்ச்சியாக விளையாடியுள்ளதால் அவரது பணிச்சுமையை கருத்தில் கொண்டு மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அவருக்கு ஓய்வு வழங்க வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. அப்படி முகமது சிராஜுக்கு ஓய்வு வழங்கும் பட்சத்தில் இந்திய அணிக்காக முதல் முறையாக அர்ஷ்தீப் சிங் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமாவார் என்று தெரிகிறது.

**கூடுதல் சாதகம்...**

லண்டன் லார்ட்ஸ் மைதானம் முழுக்க முழுக்க வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான மைதானம் என்பதனாலும், இடதுகை வேகப்பந்து வீச்சாளர்களுக்கு இந்த மைதானத்தில் கூடுதல் சாதகம் இருக்கும் என்பதனாலும் அவருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது. ஏற்கனவே இந்திய டி20 அணியில் நட்சத்திர பவுலராக இருக்கும் அவர் நீண்ட காலமாகவே டெஸ்ட் வாய்ப்புக்காக காத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## அணிக்கு திரும்பினார் ஆர்ச்சர்:

# இங்கிலாந்து அணி அறிவிப்பு

**லண்டன், ஜூலை 10-**

இந்தியா - இங்கிலாந்து இடையேயான 3-வது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் இன்று நடைபெறுவுள்ள நிலையில், இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஜோப்ரா ஆர்ச்சர் அணிக்கு மீண்டும் திரும்பியுள்ளார்.

**அபார வெற்றி....**

சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.இரு அணிகள் இடையேயான 5 டெஸ்ட் தொடரில் லீட்சில் நடைபெற்ற முதல் போட்டியில் இங்கிலாந்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பர்மிங்காமில் நடந்த 2- வது டெஸ்டில் இந்தியா 336 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று பதிலடி கொடுத்தது.

**பிளேயிங் லெவன்...**

இதனால் 1-1 என்ற சமநிலை ஏற்பட்டுள்ளது. இந்தியா- இங்கிலாந்து அணிகள் மோதும் 3 வது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் இன்று (10-ந்தேதி) தொடங்குகிறது. இந்நிலையில் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் விளையாடும் இங்கிலாந்து அணியின் பிளேயிங் லெவன் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் விவரம் வருமாறு: சாக் கிராவ்லே, பென் டக்கெட், ஒல்லி போப், ஹாரி ப்ரூக், பென் ஸ்டோக்ட்ஸ், ஜேம் ஸ்மித், கிறிஸ் வோஸ், பிரைடன் கார்சே, ஜோப்ரா ஆர்ச்சர், ஷோயிப் பாஷிர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். 52 மாத இடைவெளிக்கு பிறகு ஜோப்ரா ஆர்ச்சர் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளது குறிப்பிடத்தக்கது. காயம் காரணமாக கடந்த 2021-ம் ஆண்டு முதல் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து அவர் விலகி இருந்தார்.

# லார்ட்ஸ் மைதானம் - ஒரு பார்வை

**லண்டன், ஜூலை 10-**

இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையே இன்று 3-வது டெஸ்ட் போட்டி லார்ட்ஸ் மைதானத்தில் இன்று தொடங்கவுள்ள நிலையில் லார்ட்ஸ் மைதானம் குறித்து ஒரு பார்வை பார்ப்போம்.

**கடைசி 3 டெஸ்டுகள்...**

'கிரிக்கெட்டின் மெக்கா' என்று அழைக்கப்படும் லண்டன் லார்ட்சில் 1884-ம் ஆண்டு முதல் டெஸ்ட் கிரிக்கெட் நடந்து வருகிறது. இதுவரை 148 டெஸ்ட் போட்டிகள் நடந்துள்ளன. இதில் இங்கிலாந்து 145 டெஸ்டுகளில் ஆடி 59-ல் வெற்றியும், 35-ல் தோல்வியும், 51-ல் டிராவும் கண்டுள்ளது. இந்திய அணி இங்கு 19 டெஸ்டுகளில் விளையாடி 3-ல் வெற்றியும், 12-ல் தோல்வியும், 4-ல் 'டிரா'வும் சந்தித்துள்ளது. இதில் கடைசி 3 டெஸ்டுகளில் 2-ல் வென்றதும் அடங்கும். 2021-ம் ஆண்டில் இங்கு நடந்த டெஸ்டில் விராட் கோலி தலைமையிலான இந்தியா நிர்ணயித்த 272 ரன் இலக்கை நோக்கி ஆடிய இங்கிலாந்து 120 ரன்னில் சுருண்டது நினைவிருக்கலாம்.

**அதிகபட்சம் 454 ரன்...**

ஆஸ்திரேலிய அணி 1930-ம் ஆண்டு நடந்த டெஸ்டில் இங்கிலாந்துக்கு எதிராக 6 விக்கெட்டுக்கு 729 ரன்கள் குவித்தது இந்த ஸ்டேடியத்தில் ஒரு அணியின் மெகா ஸ்கோராகும். இங்கிலாந்தை பொறுத்தவரை 1990-ம் ஆண்டில் இந்தியாவுக்கு எதிராக 653 ரன்கள் சேர்த்தது சிறந்த ஸ்கோராகும். இந்த மைதானத்தில் இந்தியா எடுத்த அதிகபட்சம் 454 ரன்கள் (1990-ம் ஆண்டில்) ஆகும். குறைந்த ஸ்கோரில் அணிகள் 22 முறை 99 ரன்னுக்குள் அடங்கியிருக்கின்றன. இதில் அயர்லாந்து (38 ரன், 2019-ம் ஆண்டு), இந்தியா (42 ரன், 1974-ம் ஆண்டு) முதல் இரு இடங்களில் உள்ளன.

**ராகுல் மட்டும் சதம்...**

மொத்தம் 252 சதங்களும், 610 அரைசதங்களும் எடுக்கப்பட்டுள்ளன. அதிகபட்சமாக இங்கிலாந்தின் ஜோ ரூட் 7 சதங்கள் அடித்திருக்கிறார். இந்திய முன்னாள் வீரர் திலிப் வெங்சர்க்கார் 3 சதங்கள் விளாசி லார்ட்ஸ் நாயகனாக விளங்குகிறார். தற்போதைய இந்திய அணியில் இடம் பெற்றுள்ள வீரர்களில் லோகேஷ் ராகுல் மட்டும் சதம் கண்டுள்ளார். இங்கு ஒரே ஒரு முச்சதம் பதிவாகி இருக்கிறது. 1990-ம் ஆண்டில் இந்தியாவுக்கு எதிராக இங்கிலாந்து கேப்டன் கிரஹாம் கூச் 333 ரன்கள் குவித்து சாதனை படைத்தார். ஒட்டுமொத்தத்தில் அதிக ரன் குவிப்பில் ஜோ ரூட் (22 டெஸ்டில் 2,022 ரன்) முதலிடம் வகிக்கிறார்.

**ஜேம்ஸ் ஆண்டர்சன்...**

ஒரு இன்னிங்சில் 5 மற்றும் அதற்கு மேல் விக்கெட்டுகள் 196 முறை வீழ்த்தப்பட்டுள்ளன. அதிக விக்கெட் வீழ்த்தியோர் பட்டியலில் இங்கிலாந்து முன்னாள் வேகப்பந்து வீச்சாளர்கள் ஜேம்ஸ் ஆண்டர்சன் (123 விக்கெட்), ஸ்டூவர்ட் பிராட் (113 விக்கெட்) டாப்-2 இடத்தில் உள்ளனர். இந்தியா சார்பில் அதிகபட்சமாக பிஷன் சிங் பேடி, இஷாந்த் ஷர்மா, கபில்தேவ் தலா 17 விக்கெட்டுகள் (4 டெஸ்ட்) கைப்பற்றி இருக்கிறார்கள்.

**சாதகமாக இருக்கும்...**

லார்ட்ஸ் ஆடுகளம் தொடக்கத்தில் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும். போக போக பேட்டிங்குக்கு ஒத்துழைக்கும். சமீபத்தில் இங்கு நடந்த ஆஸ்திரேலியா- தென்ஆப்பிரிக்கா இடையிலான உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி ஆட்டத்தில் வேகப்பந்து வீச்சாளர்கள் மொத்தம் 31 விக்கெட்டுகளை கபளீகரம் செய்தது குறிப்பிடத்தக்கது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் திருவாரூர் மாவட்டம், காட்டூர், கலைஞர் கோட்டத்தில் உள்ள கலைஞர் அருங்காட்சியகம், முத்துவேலர் நூலகம், கலைஞரின் கலைபாதை ஒலியும் ஒளியும், கலைஞரின் அரசியல் பாதை ஒலியும் ஒளியும் போன்றவற்றை பார்வையிட்டார்.

# திருவாரூரில் முதல்வர் 'ரோடு ஷோ'

**திருவாரூர், ஜூலை 10-**

முதல்வர் மு.க.ஸ்டாலின் பவித்திரமாணிக்கம், துர்க்காலயா ரோடு, தெற்கு வீதி, பனகல் சாலை, பழைய பஸ் நிலையம், ரெயில்வே ரவுண்டானா வரை 'ரோடு ஷோ' மூலம் சாலையில் நடந்து சென்று பொதுமக்களை சந்தித்து பேசினார். அப்போது அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 2 நாட்கள் சுற்றுப்பயணமாக நேற்று திருவாரூக்கு சென்றார். சென்னையில் இருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் விமானத்தில் புறப்பட்டு திருச்சி சென்று அங்கிருந்து கார் மூலம் திருவாரூர் அருகே காட்டூரில் உள்ள கலைஞர் கோட்டத்திற்கு வந்தடைந்தார். அங்கு சிறிது நேரம் ஓய்வெடுத்தார்.

பின்னர் மாலை அங்கிருந்து புறப்பட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் பவித்திரமாணிக்கம், துர்க்காலயா ரோடு, தெற்கு வீதி, பனகல் சாலை, பழைய பஸ் நிலையம், ரெயில்வே ரவுண்டானா வரை 'ரோடு ஷோ' மூலம் சாலையில் நடந்து சென்று பொதுமக்களை சந்தித்து பேசினார். அப்போது அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் ரெயில்வே ரவுண்டானாவில் மாவட்ட தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் முதல்வர் கருணாநிதியின் வெண்கல முழு உருவச்சிலையை முதல்வர் திறந்து வைத்தார். முன்னதாக கலைஞர் கோட்டத்தில் உள்ள நூலகம், அருங்காட்சியகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டு பார்வையிட்டார். கலைஞரின் தாயார் அஞ்சுகம் அம்மையாரின் நினைவிடத்திலும் முதல்வர் மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கு எதிராக போராட்டம்:

# பீகாரில் ராகுல், தேஜஸ்வி யாதவ் பங்கேற்பு

**பாட்னா, ஜூலை 10-**

பீகார் மாநிலத்தில் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, தேஜஸ்வி யாதவ்கலந்துகொண்டனர்.



பீகாரில் நிகழாண்டு இறுதியில் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், மாநில வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் செய்யும் பணியை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இதை எதிர்த்து பல்வேறு தரப்பினர் தாக்கல் செய்துள்ள மனு உச்சநீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வரவுள்ளன.

இந்த நிலையில், வாக்காளர் பட்டியல் திருத்தத்துக்கு எதிராக மகாபந்தன் கூட்டணி சார்பில் பாட்னாவில் நேற்று போராட்டம் நடந்தது. மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் ராஷ்டிரிய ஜனதா தளத்தின் தலைவர் தேஜஸ்வி யாதவ், மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் பொதுச் செயலர்கள் உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர்.

## டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு:

# மனம் திறந்த விராட் கோலி

**லண்டன், ஜூலை 10-**

இந்திய கிரிக்கெட்டின் முன்னணி பேட்ஸ்மேன் விராட் கோலி. சமீபத்தில் டெஸ்ட் போட்டிகளில் ஓய்வு பெறுவதாக அறிவித்த நிலையில் அதுகுறித்து தற்போது மனம் திறந்துள்ளார்.

**முதல் முறையாக...**

இந்திய கிரிக்கெட்டின் முன்னணி பேட்ஸ்மேன் விராட் கோலி. சமீபத்தில் டெஸ்ட் போட்டிகளில் ஓய்வு பெறுவதாக அறிவித்தார். 2011இல் அறிமுகமான அவர் 2025 வரை 123 போட்டிகளில் 9230 ரன்களை அடித்து இந்தியாவின் நிறைய வெற்றிகளில் பங்காற்றியுள்ளார். அவருடைய தலைமையில் ஆஸ்திரேலியாவில் முதல் முறையாக டெஸ்ட் தொடரை வென்று சரித்திரம் படைத்தது இந்தியா. அதனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் வெற்றிகரமான இந்திய கேப்டன் என அழைக்கப்பட்டார்.



**வாய்ப்பு தவறவிட்டார்...**

36 வயதிலும் சிறப்பான பிட்னஸ் கொண்டிருந்த அவர், இன்னும் சில வருடங்கள் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர் திடீரென ஓய்வு பெற்றது பலருக்கும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. டெஸ்ட் கிரிக்கெட்டில் 10000 ரன்களை அடிக்கும் பொன்னான வாய்ப்பை விராட் கோலி வெறும் 770 ரன்கள் வித்தியாசத்தில் தவற விட்டது அவருடைய ரசிகர்களை சோகமடைய வைத்தது.

**நிரூபிக்க எதுவுமில்லை....**

இந்நிலையில் டெஸ்ட் கிரிக்கெட்டில் தம்மால் முடிந்த அனைத்தையும் இந்தியாவுக்காக கொடுத்து விட்டதாக விராட் கோலி தெரிவித்துள்ளார். இனிமேலும் சாதிக்கவோ நிரூபிக்கவோ எதுவுமில்லை என்று உணர்ந்ததாலேயே ஓய்வு பெற்றதாகவும் அவர் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, என்னுடைய தாடியை 2 நாட்களுக்கு முன்பாகத்தான் வர்ணம் செய்தேன். உங்களுடைய தாடியை ஒவ்வொரு 4 நாட்களுக்கு ஒரு முறை வர்ணம் பூசினால் உங்கள் (விடை பெறும்) நேரம் வந்து விட்டது என்பது உங்களுக்குத் தெரியும். இந்த முடிவு எளிதானது கிடையாது என்றாலும் சரியானதாக உணர்கிறேன். என்னால் முடிந்த அனைத்தையும் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு கொடுத்து விட்டேன். அதுவும் நான் நம்பியதை விட எனக்கு அதிகமாகவே திரும்பிக் கொடுத்துள்ளது. அதனால் மிகுந்த நன்றியுணர்வுடன் இந்த விளையாட்டிலிருந்து வெளியேறினேன். இவ்வாறு அவர் கூறினார்.

# யு-19 தொடரில் சூரியவன்ஷி புதிய சாதனை

**லண்டன், ஜூலை 10-**

இங்கிலாந்து யு-19 அணிக்கு எதிராக ஐந்து போட்டிகள் கொண்ட இளையோர் ஒருநாள் தொடரில் இந்தியா யு-19 அணி 3-2 என்ற கணக்கில் தொடரை வென்றதில் வைபவ் சூர்யவன்ஷி நட்சத்திரமாகத் திகழ்ந்தார். சூர்யவன்ஷி இந்தத் தொடரில் சதம் மற்றும் அரைசதங்களும் 355 ரன்கள் எடுத்து சராசரி மற்றும் ஸ்ட்ரைக் ரேட்டுடன் சேர்ந்து இளையோர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்டில் புதிய சாதனையாகத் திகழ்கிறது.

**3-2 என்ற கணக்கில்...**

ஐபிஎல் 2025-ல் புதிதாக எழுச்சி கண்ட இளம் நட்சத்திரமான 14 வயது வைபவ் சூரியவன்ஷி தன் ஆட்டம் வெறுமனே வாச்சாம்பொழச்சான் ஆட்டம் அல்ல, சர்வதேச அளவிலும் இதே போல் ஆட முடியும் என்பதை நிரூபித்தத் தொடராகும் இது. ஆயுஷ் மாத்ரே தலைமையிலான இந்திய இளையோர் அணி, இங்கிலாந்து இளையோர் அணிக்கு எதிரான ஒரு நாள் தொடரை 3-2 என்ற கணக்கில் வென்றது, சூர்யவன்ஷி நட்சத்திர வீரராக உருவெடுத்தார். அவர் ஐந்து போட்டிகளில் 71 சராசரி மற்றும் 174.01 ஸ்ட்ரைக்-ரேட்டுடன் 355 ரன்கள் குவித்துள்ளார். இது இருதரப்பு இளையோர் ஒருநாள் சர்வதேசத் தொடரில் அதிகபட்ச ரன் எண்ணிக்கையாகும். மேலும் தொடக்க வீரராக 2-வது அதிகபட்ச ஸ்கோர் ஆகும்.



**தனித்துவமானது...**

முக்கியமான சாதனை என்னவெனில் 300 ரன்களுக்கும் மேல் 174 என்ற ஸ்ட்ரைக் ரேட்டில் ஒரு தொடரில் எடுத்த வகையில் சூரியவன்ஷியின் சாதனை தனித்துவமானது. வங்கதேச வீரர் தவ்ஹித் ஹிருதய் இதற்கு முன்னர் இளையோர் ஒருநாள் சர்வதேசத் தொடரில் 300 ரன்களுக்கும் மேல் எடுத்ததில் அவரது ஸ்ட்ரைக் ரேட் 114.62 மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில், நான்காவது ஒருநாள் போட்டியில் சூர்யவன்ஷி அடித்த சதம், வெறும் 52 பந்துகளில் இந்த மைல்கல்லை எட்டியதால், இளைஞர் ஒருநாள் வரலாற்றில் அதிவேக சதமாகும். அவர் 78 பந்துகளில் 143 ரன்கள் எடுத்து 183.33 ஸ்ட்ரைக் ரேட்டில் என்பது 2013 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக பாகிஸ்தானின் கம்ரான் குமல் 66 பந்துகளில் 102 ரன்களை 182.14 என்ற ஸ்ட்ரைக் ரேட்டில் படைத்த சாதனையை முறியடித்தது.

**இந்திய அணியில்...**

முன்னதாக, அவர் மூன்றாவது ஒருநாள் போட்டியில் 31 பந்துகளில் 86 ரன்கள் எடுத்தார் (ஸ்ட்ரைக் ரேட் 277.41), இது இளைஞர் ஒருநாள் வரலாற்றில் மிக விரைவான 80+ ரன்கள் ஆகும், இதன் மூலம் சுரேஷ் ரெய்னாவின் சாதனையை முறியடித்தார் சூரியவன்ஷி. 2004 யு-19 உலகக் கோப்பையில் ஸ்காட்லாந்துக்கு எதிராக 236.84 என்ற விகிதத்தில் 38 பந்துகளில் 90 ரன்களை சுரேஷ் ரெய்னா எடுத்தது குறிப்பிடத்தக்கது. வைபவ் சூரியவன்ஷியின் இத்தகைய சாதனைகள் இந்த இளம் வயதில் இந்திய டி20 மற்றும் ஒரு நாள் அணியில் விரைவில் இடம்பெறுவதற்கான வழிகளைத் திறந்து விட்டுள்ளது.

## அயர்லாந்து அணி அறிவிப்பு

ஜிம்பாப்வே மகளிர் கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 டி20 மற்றும் 2 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் வரும் 20ம் தேதி தொடங்குகிறது.

**ஒருநாள் அணி விவரம்:** கேபி லூயிஸ் (கேப்டன்), அவா கேனிங், கிறிஸ்டினா கூல்டர் ரெய்லி, அலானா டால்செல், லாரா டெலானி, சாரா போர்ப்ஸ், ஆமி ஹண்டர், ஆர்லீன் கெல்லி, லூயிஸ் லிட்டில், ஜேன் மாகுயர், லாரா மெக்பிரைட், காரா முர்ரே, லியா பால், ஓர்லா பிரெண்டர்காஸ்ட்.

**டி-20 அணி விவரம்:** கேபி லூயிஸ் (கேப்டன்), அவா கேனிங், கிறிஸ்டினா கூல்டர் ரெய்லி, லாரா டெலானி, ஆமி ஹண்டர், ஆர்லீன் கெல்லி, லூயிஸ் லிட்டில், சோபி மெக்மஹோன், ஜேன் மாகுயர், லாரா மெக்பிரைட், காரா முர்ரே, லியா பால், ஓர்லா பிரெண்டர்காஸ்ட், ரெபேக்கா ஸ்டோக்கல்.

## இந்திய ஜோடி உலக சாதனை

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் நடந்த உலக கோப்பை வில்வித்தை (ஸ்டேஜ் 4) போட்டியில் கூட்டு கலப்பு அணி பிரிவில் இந்திய ஜோடியான ரிஷப் யாதவ், ஜோதி சுரேகா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதுடன், அணியாக அதிக புள்ளிகளை பெற்ற ஜோடி என்ற உலக சாதனையையும் படைத்துள்ளனர்.

ரிஷப், 72 அம்புகளில் 68 அம்புகள் 10 புள்ளிகளை 'குறி' பார்த்து எய்தி அசத்தினார். மொத்தத்தில் இவர் மட்டும் 716 புள்ளிகள் பெற்றார். இவரது அணியை சேர்ந்த ஜோதியும் 68 அம்புகள் 10 புள்ளிகளை 'குறி' வைத்து, மொத்தத்தில் 715 புள்ளிகளை பெற்றார். இது இவர்களின் தனிப்பட்ட சிறந்த செயல்பாடாகவும் பதிவானது.

## அரையிறுதியில் அல்காரஸ்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. ஆடவர் ஒற்றையர் பிரிவில் உலகின் நம்பர் 2 வீரரான ஸ்பெயினின் அல்காரஸ், இங்கிலாந்தின் கேமரூன் நோரி உடன் காலிறுதி சுற்றில் மோதினார்.

இதில் அதிரடியாக ஆடிய அல்காரஸ் 6-2, 6-3, 6-3 என்ற நேர் செட்கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு காலிறுதி சுற்றில் ரஷியாவின் கரன் கச்சனாவை வீழ்த்தி அமெரிக்காவின் டெய்லர் பிரிட்ஸ் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

## கில், ஸ்மித் முன்னேற்றம்

டெஸ்ட் போட்டிக்கான தரவரிசையை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. இதில் பேட்டர்கள் பட்டியலில் முதல் இடத்தில் இருந்த இங்கிலாந்து அணி வீரர் ஜோரூட்டை பின்னுக்கு தள்ளி சக அணி வீரர் ஹாரி ப்ரூக் முதல் இடத்தை பிடித்துள்ளார். மேலும் ஒரு இங்கிலாந்து வீரர் ஜேமி ஸ்மித் 16 இடங்கள் முன்னேறி டாப் 10-ல் இடம் பிடித்துள்ளார்.

இந்திய வீரர்களில் ஜெய்ஸ்வால் 4-வது இடத்தில் தொடர்கிறார். சுப்மன் கில் 15 இடங்கள் முன்னேறி 6-வது இடத்தை பிடித்துள்ளார். மற்றொரு இந்திய வீரரான ரிஷப் பண்ட் 1 இடம் பின் தங்கி 8-வது இடத்தில் உள்ளார்.

## பொது வேலைநிறுத்தம் எதிரொலி:

# தமிழ்நாடு - கேரளா இடையே பஸ்கள் இயக்கப்படவில்லை

**கோவை, ஜூலை 10-**

தமிழ்நாட்டிற்கு வழக்கமாக இயக்கப்படும் கேரளா அரசு பஸ்களும் இயக்கப்படவில்லை.இரு மாநிலங்களுக்கு இடையே பஸ்கள் இயக்கப்படாததால் பயணிகள் கடும் அவதி அடைந்துள்ளனர்.

நாடு முழுவதும் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும், குறைந்தபட்ச ஊதிய உயர்வை அதிகரிக்க வேண்டும், பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்குவதை கைவிட வேண்டும், புதிய ஓய்வூதியத் திட்டத்தை கைவிட வேண்டும். ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும், மத்திய அரசின் தொழிலாள விரோத சட்டங்களை உடனடியாக திரும்பப்பெற வேண்டும் என்பன உள்ளிட்ட 17 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று நாடு தழுவிய அளவிலான வேலைநிறுத்தத்துக்கு மத்திய தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்திருந்தன.

தமிழ்நாட்டில் இந்த போராட்டத்துக்கு தி.மு.க.வின் தொழிற்சங்கமான தொ.மு.ச., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தொழிற்சங்கமான சி.ஐ.டி.யு., இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தொழிற்சங்கமான ஏ.ஐ.டி.யூ.சி., காங்கிரஸ், ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள் உள்பட மற்ற கட்சிகளை சேர்ந்த தொழிற்சங்கங்கள் உள்பட 13 தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்திருந்தன. இந்த வேலை நிறுத்த போராட்டத்தில் பங்கேற்பதால் சென்னை உள்பட தமிழகம் முழுவதும் பெரும்பாலான பஸ்கள் நேற்று இயக்கப்படாது என்று தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் கோவை உக்கடத்தில் இருந்து கேரளாவுக்கு செல்லும் தமிழ்நாடு அரசு பஸ்கள் எதுவும் இயக்கப்படவில்லை. இதன்படி தென்காசியில் இருந்து கேரளாவுக்கு இயக்கப்படும் அரசு பஸ்கள் பஸ்கள் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. அதேபோல் தமிழ்நாட்டிற்கு வழக்கமாக இயக்கப்படும் கேரளா அரசு பஸ்களும் நேற்று இயக்கப்படவில்லை. கன்னியாகுமரியில் இருந்து கேரளாவுக்கு செல்லும் தமிழ்நாடு பஸ்கள் இயக்கப்படவில்லை. தமிழ்நாடு அரசு பஸ்கள் கேரள எல்லையான களியக்காவிளை வரை இயக்கப்பட்டு வருகின்றன. இரு மாநிலங்களுக்கு இடையே பஸ்கள் இயக்கப்படாததால் பயணிகள் கடும் அவதி அடைந்துள்ளனர்.

## அறியாமை இருளில் மூழ்கியுள்ளார்:

# இ.பி.எஸ் குறித்து அமைச்சர் விமர்சனம்

**சென்னை, ஜூலை 10-**

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி வரலாறு தெரியாமல் அறியாமை இருளில் மூழ்கியுள்ளார் என அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.

கோவையில் நேற்று முன்தினம் பிரசார பயணத்தின்போது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி,"திமுக ஆட்சியில் விலைவாசி விண்ணை முட்டுகிறது, மின்கட்டணம், சொத்து வரி பல மடங்கு உயர்ந்துவிட்டது. அதிமுக ஆட்சியில் கோவையில் 5 புதிய அரசு கலைக் கல்லூரிகள் கட்டப்பட்டன. ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகள், சட்டக் கல்லூரி, கால்நடைப் பூங்கா, பொறியியல், பி.எட். கல்லூரி என பல கல்லூரிகளைத் திறந்ததால் உயர் கல்வி பயிலுவோரின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

தற்போது அறநிலையத் துறையின் கைகளில் பணம் இருப்பதை திமுகவால் பொறுக்க முடியவில்லை. அது அவர்களின் கண்களை உறுத்துகிறது. கோயில்களைக் கண்டாலே அவர்களுக்கு பிடிப்பதில்லை. அதனால், கோயில் பணத்தை எடுத்து கல்லூரி கட்டுகின்றனர்" என்று பேசினார்.

இதற்கு நேற்று செய்தியாளர்களிடம் பதிலளித்த அமைச்சர் சேகர்பாபு, "அறியாமை இருளில் எடப்பாடி பழனிச்சாமி மூழ்கியுள்ளார். வரலாறு தெரியாதவர், வரலாற்றை அறியாதவர். மறைந்த தலைவர்கள் பக்தவச்சலம் தொடங்கி காமராஜர், ஜெயலலிதா என அனைவரும் கல்லூரி கட்டியிருக்கின்றனர் என்று கூறியுள்ளார்.

# ஒட்டன்சத்திரம், கீரனூரில் புதிய பேருந்து வழிதடம்: அமைச்சர் சக்கரபாணி தொடங்கி வைத்தார்




**ஒட்டன்சத்திரம், ஜூலை 10-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கீரனூரில் இரண்டு புதிய பேருந்து வழித்தடத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார் அமைச்சர் அர. சக்கரபாணி.

இரண்டு புதிய பேருந்து வழித்தடம் திறப்பு நிகழ்வில் ஒன்றிய செயலாளர் கள் சுப்பிரமணியன், பொன்ராஜ், பேரூர் கழகச் செயலாளர் அன்பு (எ )காதர் பாட்சா, பேரூராட்சி தலைவர் கருப்புசாமி, பேரூராட்சி துணைத் தலைவர் ஹாஜிஅப்துல் சுக்கூர், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சத்திய புவனா உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

படம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீரனூரில் இருந்து புதிய பேருந்து வழித்தடத்தை அமைச்சர் அர. சக்கரபாணி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# தேனி மாவட்டம் ஜங்கால்பட்டி கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாமில் 58 பயனாளிகளுக்கு ரூ.64.16 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள்

## மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கினார்



**தேனி, ஜூலை 10-**

தேனி மாவட்டம், ஜங்கால்பட்டி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 58 பயனாளிகளுக்கு ரூ.64,16,100/- மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் மகாலட்சுமி பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடன், ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

இந்த முகாமில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில், உட்பிரிவு பட்டா மாறுதல் 10 நபர்களுக்கும், பட்டா மாறுதல் 6 நபர்களுக்கும், கூட்டுப்பட்டா 3 நபர்களுக்கும், முதல்வர் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திருமண உதவித் தொகையாக ரூ.10 ஆயிரம் ஒரு நபருக்கும், இயற்கை மரணம் உதவித்தொகையாக ரூ.2, 02,500, 9 நபர்களுக்கும், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் புதிய குடும்ப அட்டை 06 நபர்களுக்கும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் அடையாள அட்டைகள் 02 நபர்களுக்கும், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சார்பில் மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் ரூ.2500 மதிப்பிலான மருத்துவ பெட்டகம் 05 நபர்களுக்கும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் மானிய விலையில் 02 நபர்களுக்கு ரூ.1000 மதிப்பிலான உளுந்துவிதை தொகுப்பு, தோட்டக்கலைத்துறையின் சார்பில் ரூ.100 மதிப்பிலான பழக்கன்றுகள் தொகுப்பு 1 நபருக்கும், சிப்பம் கட்டும் அறை அமைப்பதற்கு மானியமாக ரூ.2 லட்சம் ஒரு நபருக்கும், முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தின் கீழ் தலா ரூ.5 இலட்சம் மதிப்பிலான காப்பீடு அட்டைகள் 12 நபர்களுக்கும் என மொத்தம் 58 பயனாளிகளுக்கு ரூ.64,16,100 மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கினார்.

இம்முகாமில், தனித் துணை ஆட்சியர் சாந்தி, இணை இயக்குநர்கள், சாந்தாமணி (வேளாண்மை), கோயில்ராஜா (கால்நடை பராமரிப்புத்துறை), துணை இயக்குநர் (தோட்டக்கலை) நிர்மலா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சிவபாலன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் சம்பூர்ணம், வட்டாட்சியர் சதீஸ்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மைதிலி, மக்கத்தம்மாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மீனாட்சி சொக்கநாதர் கோவில் தேர் திருவிழா: அ.தி.மு.க. சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு



**அருப்புக்கோட்டை, ஜூலை 10-**

அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம் மீனாட்சி சொக்கநாதர் திருக்கோவில் தேர் திருவிழாவை முன்னிட்டு நகர அண்ணா திமுக சார்பாக நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.

அருப்புக்கோட்டை நகரக் கழகச் செயலாளர் சோலை .சேதுபதி நீர் மோரை பொதுமக்களுக்கு வழங்கிய தொடங்கி வைத்தார்.

நீர் மோர் பந்தல் திறப்பு விழாநிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் வீர சுப்பிரமணியன், அவைத் தலைவர் பம்பாய் மணி,வெள்ளக்கோட்டை கலு சிவலிங்கம், சவுண்டையா, செந்தமிழ் செல்வன், ஜெயவேல் பாண்டியன், ராஜப்பன், தர்மர், கணேசன், சித்தநாதன், வீரமணி, சங்கர் குமார், சண்முகவேல், சத்ய ராஜன், ராமர், சரவணன், அண்டா நாகராஜ், சுப்பிரமணி, ஈஸ்வரன், ராம் பாண்டியன், பந்தல்குடி முருகேசன், மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிற அணி நிர்வாகிகள், நகரக் கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள், கட்சித் தொண்டர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## குழந்தை காளியம்மன் கோவில் திருவிழா:

# முளைப்பாரியில் அம்மன் சிலை வைத்து ஊர்வலம்

**வத்தலகுண்டு, ஜூலை 10-**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை அருகே உள்ள குளத்துப்பட்டியில் ஆனி மாத விநாயகர், சிவன், குழந்தை காளியம்மன், கன்னிமார் கோவில்களில் விவசாயம் செழிக்கவும் மழை வேண்டி அம்மனுக்கு திருவிழா நடைபெற்றது. திருவிழாவை முன்னிட்டு கடந்த 22.6.2025 அன்று கிராம பொதுமக்கள், விழா குழுவினர் ஒன்று கூடி சாமி சாட்டுதல் முதல் நிகழ்ச்சி நடைபெற்றது. அதன் பின்னர் பொது மக்கள் கங்கணம் கட்டி விரதம் இருந்து தினந்தோறும் வழிபாடு செய்து வந்தனர். அதன் அதனைத் தொடர்ந்து கடந்த 28.6.2025 கன்னிமார் கோவில் அருகே முளைப்பாரி பந்தல் அமைத்து பெண்கள் பக்குவமாக வளர்த்தனர். முளைப்பாரிக்காக காளியம்மன் கோவில் முன்பு 7 நாட்கள் தினந்தோறும் கும்மி அடித்தால், கோலாட்டம், ஒயிலாட்டம் பல்வேறு முளைப்பாரிக்காக சிறப்பு பூஜைகள் செய்து வழிபாடு செய்தனர்.

நேற்று இரவு 8.7.2025 அச்சனம்பட்டியில் உள்ள விரு சின்னம்மாள் கோவில் அருகில் குழந்தை காளியம்மன் பிறந்த இடத்தில் சிலை வைத்து வழிபாடு சிறப்பு பூஜைகள் செய்து இரவில் ஊர்வலமாக குழந்தை காளியம்மன் கோவிலுக்கு அம்மன் சிறப்பு அலங்காரத்தில் வந்தடைந்தார். அதனைத் தொடர்ந்து அம்மனுக்கு பொங்கல் வைத்து சக்தி குட்டி வெட்டி அம்மனை சன்னிதானத்தில் வைத்து பின்னர் முளைப்பாரி ஊர்வலம் வந்த பெண்கள் அம்மன் சிலையுடன் ஏராளமான சற்று வித்தியாசமாக முளைப்பாரியில் அம்மன் சிலைகளுடன் அமைத்து வந்ததால் மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றது.

தொடர்ந்து கோவில் முன்பாக முளைப்பாரி ஒன்றாக வைத்து கும்மி அடித்தால் , அம்மனுக்கு மாவிளக்கு எடுத்தல், அதனைத் தொடர்ந்து பொங்கல் வைத்தல், கிடா வெட்டுதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அப்போது பொதுமக்கள் தீச்சட்டி எடுத்தல் போன்ற பல்வேறு நேர்த்திக்கடனை அம்மனுக்காக செலுத்தினார்கள். இவ்விழாவில் நிலக்கோட்டை, கோயமுத்தூர், மதுரை, திருப்பூர், சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் இருந்து ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை குளத்துப்பட்டி கிராம பொதுமக்கள் மற்றும் விழா கமிட்டிளர் செய்திருந்தனர்.

# நத்தம்: தொழிலாளிக்கு தலையில் வெட்டு - 4 பேருக்கு போலீஸ் வலை

**நத்தம், ஜூலை 10-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே காசம்பட்டியை சேர்ந்தவர் ராஜ்குமார் (40). இவர் மாம்பழங்களை மொத்தமாக ஏற்றி மதுரை மார்க்கெட் சென்று வியாபாரம் செய்து வருகிறார். இந்நிலையில் சம்பவத்தன்று தனது மினிவேனில் மதுரைக்கு சென்று விட்டு ஊருக்கு திரும்பினார். ஊர் மந்தையில் வேன் சென்று கொண்டிருந்த போது வேனில் இருந்த டிரை அதே பகுதியை சேர்ந்த பிரகாஷ் என்பவர் மீது மோதியது.

இதில் ஆத்திரமடைந்த பிரகாஷ் மற்றும் அவரது உறவினர்கள் தினேஷ், சரவணன், இரமேஷ் ஆகியோருடன் சேர்ந்து ராஜ்குமாரை தலையில் கத்தியால் குத்தி தாக்கி விட்டு தப்பியோடிவிட்டனர். இதில் தலையில் பலத்த காயமடைந்த ராஜ்குமாரை அக்கம்பக்கத்தினர் மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் அவர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கபட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து போலீஸ்-சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார் வழக்குபதிவு செய்து கத்தியால் குத்திவிட்டு தப்பியோடிய 4 பேரை வலைவீசி தேடி வருகிறார்.

# பரமக்குடி: ஏ.ஐ.டி.யூ.சி சார்பில் பொது வேலை நிறுத்தம்- மறியல் போராட்டம்



**பரமக்குடி, ஜூலை 10-**

பரமக்குடியில் பொது வேலை நிறுத்தம் மற்றும் மறியல் போராட்டம் நடந்தது. ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட பொதுச் செயலாளர் என்.கே. ராஜன், சி.ஐ.டி.யு மாவட்ட துணைச் செயலாளர் தி.ராஜா ஆகியோர் தலைமையில் போராட்டம் நடைபெற்றது.

ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்டத் தலைவர் எஸ்.பி.ராதா, கே. ஆர். சுப்பிரமணியன்,சி.ஐ.டி.யு. மோதிலால்,தட்சிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் எஸ்.எம். ஜெயசீலன், போக்குவரத்து தொழிற் சங்க பொறுப்பாளர்கள் எஸ். சுப்பிரமணியன், கோவிந்தன், ரமேஷ்பாபு, ஏஐடியூசி உள்ளாட்சிப் பணியாளர்கள் சங்க பொறுப்பாளர் சாந்தி, தமிழ் நாடு மின்சார வாரியத்தில் தொழிலாளர் சங்கம் சார்பில் முருகன், ஆரோக்கியம், எஸ். ஆர்.ராஜன், ஜெய வீரபாண்டியன்,தொமுச சார்பில் சுப்பிரமணியன், சேதுராமன்,மணிகண்டன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.இந்த மறியல் போராட்டத்தினை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் என். எஸ். பெருமாள் தொடங்கி வைத்துப் பேசினார்.

ஒன்றிய அரசின் மக்கள் விரோதப் போக்கினை கண்டித்தும், போராடி பெற்ற தொழிற்சங்கங்களின் சட்டங்களை திருத்துவதை கைவிடக் கோரியம்,வரலாறு காணாத விலைவாசி உயர்வினை கட்டுப்படுத்த வேண்டும். குறைந்தபட்ச ஊதியம் 25 ஆயிரம் நிர்ணயிக்க வேண்டும் மாதந்தோறும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் அனைவருக்கும் ரூ. 6 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் உட்பட 79 பேரை போலீசார் கைது செய்தனர்.

# நத்தத்தில் விபத்து: பெண் படுகாயம்

**நத்தம், ஜூலை 10-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே செந்துறை- பழனிபட்டியை சேர்ந்தவர் துர்கா (40). இவர் தனது பைக்கில் குடகிப்பட்டிக்கு சென்று விட்டு மீண்டும் ஊருக்கு திரும்பி கொண்டிருந்தார். குடகிப்பட்டி- கணவாய் பகுதியில் சென்று கொண்டிருந்த போது எதிரே மல்லநாயக்கன்பட்டியை சேர்ந்த ராஜேந்திரன் என்பவர் ஒட்டி வந்த பைக் மோதியது. இதில் தடுமாறி கீழே விழுந்த துர்காவிற்கு பலத்த காயம் ஏற்பட்டது. ஆபத்தான நிலையில் அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு திண்டுக்கல் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். மேலும் இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# சிதம்பராபுரம் கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 298 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

## அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் வழங்கினார்



**விருதுநகர், ஜூலை 10-**

அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சிதம்பராபுரம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா தலைமையில், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் 298 பயனாளிகளுக்கு ரூ.27.63 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில், 53 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா ரூ.22,68,133/- மதிப்பிலும், 7 பயனாளிகளுக்கு நத்தம் பட்டா மாறுதல்களும், 27 பயனாளிகளுக்கு புஞ்சை மற்றும் நஞ்சை பட்டா மாறுதல்களும், 16 பயனாளிகளுக்கு இ-பட்டாக்களும், 38 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும், 37 பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு திட்ட உழவர் அட்டைகளையும், 105 பயனாளிகளுக்கு நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டாக்களையும், 5 பயனாளிகளுக்கு தோட்டக்கலைத்துறையின் சார்பில் ரூ.38,680/-மதிப்பில் சொட்டுநீர்ப்பாசன மானியம், பழச்செடி, காய்கறி விதை தொகுப்புகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.5825 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், மகளிர் திட்டம் சார்பில் 5 பயனாளிகளுக்கு சமுதாய முதலீட்டு நிதி ரூ.4,50,000/- மதிப்பிலும் என மொத்தம் 298 பயனாளிகளுக்கு ரூ.27.63 இலட்சம் மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார். நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியதாவது:-

முதல்வர் தலைமையிலான அரசு ஒவ்வொரு நாளும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், விடியல் பயணத்திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், புதுமைப் பெண், தமிழ் புதல்வன், இன்னுயிர் காப்போம் உள்ளிட்ட திட்;டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும், உங்களுடன் ஸ்டாலின் முகாமில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை விடுபட்ட தகுதியானவர்கள், முதியோர் ஓய்வூதியம், பட்டா மாறுதல், விவசாயம் சார்ந்த குறைகள் உள்ளிட்டவைகள் குறித்து மனுக்கள் வழங்கும் பட்சத்தில், அரசிற்கு நேரடியாக சென்று இந்த பணிகள் அனைத்தும் விரைவாக செய்து முடிக்கப்படும்.இதன் மூலமாக நீங்கள் உங்கள் வாழ்க்கையில் மேன்மையடைய வேண்டும் என்பதற்காக தான் அரசு இத்தகைய திட்டங்களை எல்லாம் தீட்டி, நேரடியாக உங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது என அமைச்சர் தெரிவித்தார். முன்னதாக இந்த மக்கள் தொடர்பு திட்ட முகாமில் பல்வேறு அரசு துறைகள் மூலமாக அமைக்கப்பட்ட அரசு திட்டங்கள் சார்ந்த அரங்குகளை அமைச்சர் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் ரமேஷ் , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் நாச்சியார் அம்மாள், அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் செந்தில் வேல், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சுப்பாராஜ், செட்டிகுறிச்சி முன்னாள் பஞ்சாயத்து தலைவர் பிரபாகரன் பல்வேறு அரசு துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திருமங்கலத்தில் நடைபெற்று வரும்

# ரயில்வே மேம்பால பணிகள் டிசம்பரில் முடிவடையும்: தமிழக சட்டமன்ற உறுதிமொழிக்குழு தலைவர் உறுதி



**திருமங்கலம், ஜூலை 10-**

திருமங்கலம் ரயில்வே மேம்பால பணிகள் டிசம்பர் மாதத்தில் முடிவடையும் என தமிழ்நாடு சட்டமன்ற உறுதிமொழிக்குழு தலைவர் தி.வேல்முருகன் எம்.எல்.ஏ. செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2024-2026-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப்பேரவை உறுதிமொழிக் குழுத் தலைவர் தி.வேல்முருகன் எம்.எல்.ஏ தலைமையிலும், மாவட்ட கலெக்டர் பிரவீன்குமார் முன்னிலையிலும் சட்டமன்ற குழு உறுப்பினர்கள் கோ.தளபதி,பூமிநாதன் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழு மதுரை மாவட்டத்திலுள்ள அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் நவீன சிறுநீரக கல் அகற்றும் மருத்துவ உபகரணம் வழங்கப்படுதல் குறித்தும், பெரியார் பேருந்து நிலைய பணிகள் குறித்தும்,மதுரை மீனாட்சி அம்மன் கோவில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் குறித்தும் திருப்பரங்குன்றம் கோவிலுக்கென புதிய காவல் நிலையம் உருவாக்குதல் குறித்தும், திருமங்கலம் சேமிப்புக் கிடங்கு வளாகத்தில் காலியாக உள்ள இடத்தில் கூடுதலாக புதிய சேமிப்புக் கிட்டங்கின் கட்டப்படுதல் குறித்தும்,திருமங்கலம் இரயில் நிலையம் அருகில் நடைபெற்று வரும் இரயில்வே மேம்பால பணிகள் குறித்தும்,கிண்ணி மங்கலத்தில் நடைபெற்று வரும் கூட்டு குடிநீர் திட்ட பணிகள் குறித்தும் கள ஆய்வு செய்து பணிகளை விரைவாக முடிப்பது தொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர். இதனை தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த தி.வேல்முருகன் எம்.எல்.ஏ. கூறுகையில்: திருமங்கலம் நகர் மக்கள் பயன் பெற்றிடும் வகையில் கட்டப்பட்டு வரும் இந்த ரயில்வே மேம்பால பணிகள் வரும் டிசம்பர் மாதத்தில் முடிவடையும்.அதற்காக இந்த பாலத்தினை தரமாக குறித்த காலத்தில் கட்டி முடித்திடுமாறு ஒப்பந்ததாரரை கேட்டுக்கொள் கிறேன் என்று தெரிவித்தார். முன்னதாக கப்பலூர் சுங்கச்சாவடி எதிர்ப்பு ஒருங்கிணைப்பு குழு நிர்வாகிகள் திரண்டு வந்து சட்டமன்ற உறுதிமொழிக்குழு தலைவர் தி.வேல்முருகன் எம்.எல்.ஏவை நேரில் சந்தித்து கப்பலூர் சுங்கச்சாவடியின் விதிமீறல் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்து மக்களுக்கு இடையூறாக உள்ள கப்பலூர் சுங்கச்சாவடியை இடமாற்றம் செய்திட உதவிடுமாறு கேட்டுக் கொண்டனர். இது தொடர்பாக கலெக்டருடன் நடைபெறவுள்ள ஆலோசனை கூட்டத்தில் கப்பலூர் சுங்கச்சாவடி பிரச்சனை குறித்து நிச்சயமாக பேசிடுவேன் என்று தி.வேல்முருகன் எம்.எல்.ஏ உறுதியளித்தார். இந்த ஆய்வின் போது வருவாய்த்துறை, நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை, குடிநீர் வழங்கல் துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

# நத்தத்தில் சாலை மறியல்: 115 பேர் கைது



**நத்தம், ஜூலை 10-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பஸ் நிலையம் அருகில் சி.ஐ.டி.யு தொழிற்சங்கங்கள் சார்பில் சாலை மறியல் போராட்டம் நடந்தது. இதற்கு சி.ஐ.டி.யு மாவட்ட துணை செயலாளர் பாண்டியன் தலைமை தாங்கினார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் முன்னாள் மாவட்ட குழு உறுப்பினர் ஸ்டாலின்,மாதர் சங்க மாநில செயலாளர் ராணி, மாவட்ட தலைவர் சுமதி,கட்டுமான சங்க மாவட்ட துணை செயலாளர் குழந்தைவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில் கட்டுமான தொழிலாளர்களுக்கு பென்சன் 3 ஆயிரம் வழங்க வேண்டும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும்,

நூறுநாள் வேலை திட்டத்தை 150 நாளாக உயர்த்திட வேண்டும், சாலை பாதுகாப்பு சட்டத்தை வாபஸ் வாங்க கோருவது உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி மத்திய அரசை வலியுறுத்தி சாலை மறியல் போராட்டம் நடந்தது.

இதனால் நத்தம்- திண்டுக்கல் சாலையில் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தொடர்ந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 70 பெண்கள் உள்பட 115 பேரை நத்தம் போலீசார் கைது செய்தனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று மாலை திருவாரூரில் பவித்திரமாணிக்கம், துர்க்காலயா ரோடு, தெற்கு வீதி, பனகல் சாலை, பழைய பஸ் நிலையம், ரெயில்வே ரவுண்டானா வரை 'ரோடு ஷோ' மூலம் சாலையில் நடந்து சென்று பொதுமக்களை சந்தித்து பேசினார். அப்போது அவருக்கு மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# நீதிபதி யஷ்வந்த் வர்மா விவகாரம்: மத்திய அரசுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு

புதுடில்லி, ஜூலை 10-

தலைநகர் டில்லியில் உள்ள வீட்டில், தீயில் பாதி எரிந்த நிலையில் மூட்டை மூட்டையாக ரூபாய் நோட்டுகள் கைப்பற்றப்பட்ட விவகாரத்தில், உயர்நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மாவை பணி நீக்கும் செய்யும் மத்திய அரசின் தீர்மானத்துக்கு ஆதரவு அளிப்பதாக எதிர்க்கட்சிகள் உறுதி அளித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

டில்லி உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர் யஷ்வந்த் வர்மா. இவரது வீட்டில் கடந்த மார்ச் மாதம் நள்ளிரவில் தீ விபத்து ஏற்பட்டது. தீயணைப்பு படையினர் சென்று தீயை அணைத்த போது, வீட்டின் ஒரு அறையில், பாதி எரிந்த நிலையில், மூட்டை மூட்டையாக 500 ரூபாய் நோட்டுகள் கண்டெடுக்கப்பட்டன. இது, நாடு முழுதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.



முறைகேடாக சம்பாதித்த பணத்தையே நீதிபதி வர்மா பதுக்கி வைத்திருந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது; அதை அவர் மறுத்தார். எனினும், அவரை அலகாபாத் உயர் நீதிமன்றத்துக்கு, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி இடமாற்றம் செய்தார். அங்கு அவருக்கு பணி ஒதுக்க வேண்டாம் என்றும், அலகாபாத் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு அறிவுறுத்தினார்.

மேலும், நீதிபதி வீட்டில் கட்டுக்கட்டாக ரூபாய் நோட்டுகள் சிக்கிய விவகாரம் குறித்து விசாரிக்க, குழு ஒன்றை சுப்ரீம் கோர்ட் அமைத்தது. டில்லி போலீஸ் கமிஷனர் சஞ்சய் அரோரா, டில்லி தீயணைப்பு படை தலைவர் அதுல் கார்க் உள்ளிட்ட 50 பேரிடம் விசாரணை நடத்தி, வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அவரை பதவியில் இருந்து நீக்கும்படி ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால், வர்மாவை பதவி நீக்குவது அவ்வளவு எளிதல்ல. பார்லிமென்டில் அவர் மீது, 'இம்பீச்மென்ட்' எனப்படும், பணி நீக்க தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். தீர்மானத்தை கொண்டு வருவதற்கு, லோக்சபாவில், 100 எம்.பி.,க்களின் ஆதரவும், ராஜ்யசபாவில், 50 எம்.பி.,க்களின் ஆதரவும் தேவை. இதற்கான பணிகள் துவங்கி உள்ளன. வரும் பார்லிமென்ட் மழைக்கால கூட்டத்தொடர் வரும் ஜூலை 21 முதல் ஆக., 22 வரை நடைபெற உள்ளது. இந்த தொடரில் பணி நீக்க தீர்மானம் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து விசாரணைக் குழு அமைக்கப்படும். இந்நிலையில், யஷ்வந்த் வர்மாவுக்கு எதிராக பணி நீக்க தீர்மானம் கொண்டு வரும் மத்திய அரசின் முடிவுக்கு ஆதரவு அளிப்பதாக எதிர்க்கட்சிகள் உறுதியளித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனால், பணி நீக்க தீர்மானம் எளிதாக நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 'ஓரணியில் தமிழ்நாடு'...(1-ம் பக்க தொடர்ச்சி)

இரண்டு வள்ளல்களும் காந்தி வழியைக் கடைப்பிடித்தவர்கள். காந்தி வழி, அம்பேத்கர் வழி, பெரியார் வழி என்று நமக்கான பல வழிகள் இருக்கின்றன. ஆனால், மாணவர்களாகிய நீங்கள் ஒரு போதும் 'கோட்சே கூட்டத்தின்' வழியில் சென்றுவிடக் கூடாது. கல்வி நிறுவனத்துக்கும், அங்கே படிக்கின்ற மாணவர்களால் தான் பேரும் புகழும் கிடைக்கும். உயர்ந்த சிந்தனையாளர்களோடு தொலைநோக்குப் பார்வையை செயல்வடிவமாக்கப் போகின்றவர்கள் மாணவர்களான நீங்கள்தான்.

## வளர்ச்சிக்கு உறுதுணை

மாணவர்களுக்கு படிப்பு மிகவும் முக்கியம். அதுதான் உங்களின் நிலையான சொத்து. பல்வேறு திறமைகள் கொண்டவர்களாக, தன்னம்பிக்கையும் சமூக அக்கறையும் நிறைந்தவர்களாக மாணவர்கள் வளர வேண்டும். இந்த கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் போல நாமும் வருவோம் என்று உங்கள் மனதில் உருவாகும் நம்பிக்கைதான் இந்த கல்லூரியின் தன்னம்பிக்கை சான்றிதழ். உங்களின் முன்னாள் மாணவர்கள் பட்டியலில் பல ஐஏஎஸ்., ஐபிஎஸ் அதிகாரிகள், நீதிபதிகள் கூட இருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாடு கேபினட்டில் இரண்டு அமைச்சர்கள் உங்கள் கல்லூரியில் படித்து உருவான மாண்புமிகுக்குரியவர்கள். ஒருவர் கே.என்.நேரு. மற்றொருவர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம். உங்கள் சீனியர்கள் எங்களுக்கும் அமைச்சரவையில் சீனியர்கள் தான். நாளைக்கு உங்களில் இருந்து சிலர்கூட அந்தப் பட்டியலில் வரலாம். வரவேண்டும். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கலாம்.

## யாராலும் வீழ்த்த....

'ஓரணியில் தமிழ்நாடு' - நின்றால் தமிழ்நாட்டை யாராலும் வீழ்த்த முடியாது. நான் அரசியல் பேசவில்லை. மாணவர்களுக்கு நிச்சயம் அரசியல் புரிதல் இருக்க வேண்டும் என்று பேசுகிறேன். கடந்த கால படிப்பினைகளின் நிகழ்கால வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு எதிர்காலம் வளமாக அமைய வேண்டும். அந்த எதிர்காலம் என்பது நீங்கள்தான். கல்வி நமக்கு எளிதாக கிடைத்து விடவில்லை; நம்முடைய தலைவர்கள் நடத்திய சமூகநீதி போராட்டங்களால் கிடைத்தது. சமூக நீதி போராட்டங்களின் பலன்தான் இன்றைக்கு நாம் பார்க்கின்ற தமிழ்நாடு.

## பறிக்க முடியாத...

இஸ்லாமிய சகோதரர்களின் அரசியல் உரிமைகளையும் காப்பாற்றும் இயக்கமாக திமுக எந்நாளும் இருக்கும். இது நான் உங்களுக்குத் தரும் உறுதி. கல்விதான் யாராலும் பறிக்க முடியாத ஒரே சொத்து. அதை மாணவர்களுக்கு கொடுப்பதோடு திறன் மேம்பாட்டை வளர்க்கவும், அதற்கேற்ற வசதிகளை வழங்கவும், திராவிட மாடல் அரசு தயாராக இருக்கிறது. எங்களின் கல்வி வளர்ச்சித் திட்டங்களுக்கு ஜமால் முகமது கல்லூரி போன்ற நிறுவனங்களும் துணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# தமிழ்நாட்டில் வெப்பநிலை 3 நாட்களுக்கு உயர வாய்ப்பு

சென்னை, ஜூலை 10-

தமிழகத்தில் அடுத்த 3 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் ஒரிரு இடங்களில் இன்று இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஒரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்தில் வீசக்கூடும். 11 முதல் 15-ம் தேதி வரை ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் அடுத்த 3 நாட்களுக்கு ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்றும், நாளையும் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் இன்று முதல் 13-ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 65 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடு தழுவிய...(1-ம் பக்க தொடர்ச்சி)

கேரளாவில் முக்கிய நகரங்களில் கடைகள், வணிக வளாகங்கள் மூடப்பட்டிருந்தன. இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டு இருந்தது. தனியார் பஸ்கள் இயக்கப்படவில்லை. குறைந்த அளவு எண்ணிக்கையிலான அரசு பஸ்களே இயக்கப்பட்டன. பல்வேறு இடங்களில் தொழிற்சங்கத்தினர் பந்த்துக்கு ஆதரவு தெரிவித்து ஊர்வலம் நடத்தினர்.

காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்யும் கர்நாடகாவில், பந்த் முற்றிலும் பிசுபிசுத்தது. பெங்களூரு உள்ளிட்ட பல நகரங்களில் அரசு பஸ், ஆட்டோ, வாகனங்கள் அனைத்தும் வழக்கம்போல் இயங்கின. இயல்பு வாழ்க்கையில் எந்த பாதிப்பும் இல்லை. இடதுசாரி தொழிற்சங்கத்தினர் முக்கிய நகரங்களில் ஊர்வலம் நடத்தினர். பா.ஜ., ஆட்சி செய்யும் மாநிலங்களில் பந்த் காரணமாக பாதிப்பு எதுவும் இல்லை. அரசு ஊழியர்கள், தொழிற்சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் மட்டுமே வெவ்வேறு இடங்களில் நடந்தன.

முன்னதாக, அரசு அலுவலகங்களுக்கு தமிழக அரசின் தலைமை செயலர் முருகானந்தம் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், போராட்டத்தில் பங்கேற்பது, அரசு அலுவலகங்களின் இயல்பான செயல்பாட்டை பாதிக்கும். எனவே, தமிழக அரசு ஊழியர்கள், நடத்தை விதிகளை மீறும் செயல்களில் ஈடுபடக்கூடாது. மீறினால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.





திருவாரூர் மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இன்று வருகை தரும்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை

வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்.

தமிழ்நாடு அரசின் நான்கு ஆண்டு சாதனைகள் முடிவுற்றப்பணிகள், நடைபெறும் பணிகள், நடைபெற உள்ள பணிகள்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | வருடம் | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| | முடிவுற்றப்பணிகள் | | |
| 1 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் | 2021-22, 2022-23 | 19.02 |
| 2 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 | 2022-23, 2023-24 | 2.43 |
| 3 | தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் | 2020-21, 2021-22 | 1.85 |
| 4 | இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பும் வட்டி நிதி | 2020-21 | 0.17 |
| 5 | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் | 2021-22 | 10.00 |
| 6 | நமக்கு நாமே திட்டம் | 2021-22, 2022-23 | 0.54 |
| 7 | 15வது நிதிக்குழு மானியம் | 2021-22, 2022-23 2023-24, 2024-25 | 8.3 |
| 8 | மூலதன மானிய நிதி | 2022-23 | 2.21 |
| 9 | மாநில நிதிக்குழு மானியம் | 2023-24 | 0.66 |
| 10 | நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் | 2024-25 | 4.35 |
| 11 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் | 2022-23 2023-24, 2024-25 | 1.56 |
| 12 | கல்வி நிதி | 2022-23 | 0.25 |
| | நடைபெற்றுவரும் பணிகள் | | |
| 1 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் | 2022-23, 2023-24 | 40.75 |
| 2 | அம்ரூட் 2.0 | 2021-22 | 78.15 |
| 3 | மூலதன மானிய நிதி | 2023-24 | 4.06 |
| 4 | TNCRUDP | 2023-24 | 29.46 |
| 5 | தூய்மை இந்தியா திட்டம் | 2023-24, 2024-25 | 1.79 |
| | நடைபெற உள்ள பணிகள் | | |
| 1 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் | 2025-26 | 9.14 |
| 2 | நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் | 2025-26 | 8.17 |

--:இங்ஙனம்:--

S.புவனப்பிரியாசெந்தில் நகர்மன்ற தலைவர்

S.அகிலாசந்திரசேகர் நகர்மன்ற துணைத்தலைவர்

போ.வி.சுரேந்திரஷா M.A., ஆணையர்

மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள், திருவாரூர் நகராட்சி